# கச்சதீவு யாத்திரிகர் கைதானவர்களில் 22 பேர் இந்தியராம்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 48
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் பங்குனி 17 முஹறம் 11 ஞாயிற்றுக்கிழமை [30-3-69]


## 73 பேர் விடுதலை; 10 பேர் பாதுகாப்பில்

**யாழ்ப்பாணம், ஞாயிறு**

**அண்மையில் நடைபெற்ற கச்சதீவு பெருநாளில் கலந்துகொண்டுவிட்டு இலங்கை திரும்பியவர்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 22 பேர் தம்மை இந்தியர்களென ஒப்புக்கொண்டுள்ளதாகவும் 10 பேர் விசாரணைக்காகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும், 73 பேர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.**

கச்சதீவு அந்தோனியார் பெருநாளில் கலந்துகொண்டுவிட்டு இலங்கை திரும்பிய யாத்திரிகர்களில் 111 பேர் சட்டவிரோத கள்ளக் குடியேற்றக்காரர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் 73 பேர் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டதாகவும், 6 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு மீண்டும் விசாரிக்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

மிகுதி 32 பேர் தலைமன்னார் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 22 பேர் தாம் சட்டவிரோதமாகக் குடியேறியதை ஒப்புக்கொண்டு மீண்டும் இந்தியா திரும்பச் சம்மதித்திருப்பதாகவும், தெரிகிறது. 10 பேர் விசாரணைக்காகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

போர்த்துக்கலைச் சேர்ந்த 25 வயதுடைய மிராண்டா என்பவரும் இவர்களுள் ஒருவரென்றும், இவரின் பாஸ்போர்ட்டில் இலங்கை செல்ல விசா இல்லாதபடியாலும், இவர் சம்பந்தமாகப் போர்த்துக்கல்ஹைக் கமிஷனருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

(அ. நி)

# 'கீழ் மாகாணத்தை பின்பற்றி ஆலயங்களை திறந்து விடுக'

## மூன்று பிரதி முடிவு ஒரு சதித்திட்டமாகும்

### பிரதமருக்கு கண்டனக் கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழ் நாட்டுக்கும், ஈழநாட்டுக்குமிடையே இருந்துவரும் கலாச்சாரத் தொடர்பை துண்டிப்பதற்காக தேசிய அரசாங்கம் எடுத்திருக்கும் ஒரு சதித்திட்டமே தமிழ்ப்படங்களின் பிரதியை மூன்றாகக் குறைத்திருப்பதாகும். இந்த முடிவை அரசாங்கம் உடனடியாக பரிசீலனை செய்து கூடிய பிரதிகள் எடுக்க வழி வகுக்கவேண்டுமென தமிழரசுக்கட்சியின் புதிய தலைவரான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களை கலாச்சார பாலவனமாக்கும் இத்திட்... இக்கடிதத்தில் திரு. இராசமாணிக்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எந்த வகையிலாவது தமிழ்ப்படங்களின் வருகையை அரசாங்கம் தடை செய்ய முயன்றால் அதை தமிழ் மக்கள் எதிர்த்தே தீருவார்கள். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள தொடர்பை ஒரு போதும் துண்டிக்க இயலாது. இலங்கையின் திரைப்பட வளர்ச்சியை அதிகரிக்கச்செய்ய வேண்டுமென்பதற்காக தமிழ்ப்படப் பிரதிகளை மட்டப்படுத்துவது சரியான பரிகாரமல்ல.

சிறுபான்மை இனமான தமிழ் மக்களை பாதிக்கும் இந்த முடிவை அரசாங்கம் உடனடியாக புனராலோசனை செய்து சரியான ஒரு முடிவை எடுக்கவேண்டு...

## தமிழரசுக்கட்சி தலைவரின் உருக்கமான வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஞாயிறு

''சிறுபான்மை இனமான தமிழினத்துக்குள்ளேயே சாதி ஏற்றத்தாழ்வு இருக்கும் வரை எமது உரிமைகளையும் தேவைகளையும் பெரும்பான்மையினத்தவரிடமிருந்து எம்மால் பெறமுடியாது.

கிழக்கிலங்கையில் வாழ்பவர்களில் 75 வீதமான ... சகல மக்களது தரிசனத்துக்காகவும் ஆலயங்களைத் திறந்து விடவேண்டும்.''

தமிழரசுக்கட்சியின் புதிய தலைவரான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி. விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் வருடாந்த மாநாட்டு வேலைகளைக் கவனிப்பதற்காக நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த திரு. எஸ். எம். இராசமாணிக்கம் 'ஈழநாடு' மூலம் ஆலயப்பிரவேசம் பற்றி விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று ... தீண்டாமை என்னும் பேயை தமிழினத்தை விட்டு அடி... ...கும சமத்துவமான வழிபாட்டுக்கு உரிமை உண்டு. சாதியின் பெயர் கொண்டு ஒரு சமுதாயத்தை ஆலயத்துள் செல்ல விடாது இருப்பது அநீதியானதாகும்.

இவைகளைச் சட்டத்தின் மூலம் தான் திருத்தவேண்டும் என்றில்லை. மக்கள் மனம் முதலில் மாறவேண்டும். சட்ட மூலம் செய்ய முடியாததையும் மனமாற்றத்தின் மூலம் சுலபமாகச் செய்யலாம்.

இந்தியாவில் 'சிதம்பரம்' போன்ற ஆலயங்கள் சகல மக்களுக்காகவும் திறந்து விடப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையில் இந்தப் பிரச்னைக்கே இடமில்லை. இது ஒரு தீராத பிரச்னையாயிருந்து வருவது தமிழினத்துக்கு ஒரு சாபக்கேடாகும்.

தமிழினத்தின் எதிர்கால நலன் கருதியாவது, ஒற்று...

## பார்வதி பலாத்கார வழக்கு

### ''மருமகனுடன் கூடிச் சென்ற பார்வதி 1 கிழமை விளக்கமறியலில் இருந்தார்''

### தாயார் தெய்வானை சாட்சியம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

பார்வதி பலாத்கார வழக்கில், எதிரியின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணைசெய்யப்பட்டபோது பார்வதியின் தாயாரான நாகலிங்கம் பெண் தெய்வானை மேற்கண்டவாறு கூறினார்.

தெய்வானை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: பார்வதி எனது மகள். விக்கிரமரத்தின என்மருமகன். சம்பவம் நடந்ததினம் மருமகன் வீட்டில் இல்லை. நான் போய் மருமகனைக் கூட்டி வந்தேன். அவர் வந்துபட்டணத்தில் நின்றார். நான் வீட்டுக்கு வந்தேன். இரவு 10 மணிக்கு மருமகன் வீட்டிற்கு வந்தார். தோமஸ் பலாத்காரம் செய்ததாக மகள் என்னிடம் கூறியதை ... மற்றவர்களை இறங்கவேண்டாமென்றார். மகளும் மருமகனும் ஜீப்பில் சென்றனர். நான் வீட்டில போய்ப் படுத்துவிட்டேன். மறுநாட்காலை, எனதுமகள் இன்ஸ்பெக்டர் பலாத்காரம் புரிந்ததாகக் கூறினார். மருமகன் வீட்டிலில்லை. வேறு உதவியும் இல்லை, என் மகளை முலலைத்தீவிற்கு எனது தம்பி வீட்டிற்குகூட்டிச்சென்றேன். நான் திரும்பவும் வவுனியா வந்தேன். 3 நாட்களால மகளைக்கூட்டி வந்தேன்.

எதிரியின் வழக்கறிஞர் தெய்வானையை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: மருமகனுக்கு நீரா சொன்னீர்?-அவருக்கு தமிழ் கொஞ்சம் தெரியும். நான் தான் சொன்னேன்.

வழ: கீழ்கோர்ட்டில் மருமகனுக்கு தமிழ் தெரியாததால் பக்கத்து வீட்டுக்காரரைக்கொண்டுதான் சம்பவத்தைத் தெரிவித்தேன் என்றீரா?- ஞாபகமில்லை.

வழ: அப்படி பதியப்பட்டிருந்தால் சரியா-? ஆம்.

வழ: பக்கத்து வீட்டுக்காரருக்கு சம்பவத்தை ...

... எனது மகள் பார்வதி விக்கிரம சிங்காவுடன் கூடிக்கொண்டு போனதற்கு ஒரு கிழமை விளக்கமறியலில் இருந்தார். அதன் பின் அவர்களைக் கூட்டிக் கொண்டுவந்து திருமணம் செய்துவைத்தேன். என் மகள் அவரைதிருமணம் செய்ய விரும்பினாள். அதனால் நான் சம்மதித்து திருமணம் செய்துவைத்தேன்.

...பதி திரு. ஆர் பரமகுரு சாட்சியமளிக்கையில, தான் வவனியா மாஜிஸ்டிரேட்டாக இருந்தபோது இவ்வழக்கு சம்பந்தமாக அடையாள அணிவகுப்பு நடத்தியதாகக் கூறினார்.

அனுராதபுரம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட திரு. ஏ. மகேந்திரன் கூறியதாவது:

நான் பங்களாவில இருந்தபோது விக்கிரமசிங்கவந்து சம்பவத்தைக் கூறினார். வவுனியா பகுதிக்கு நான் பொறுப்பிலலையென்றும், மன்னார் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனை சந்திக்கும்படியும்கூறினேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

வவனியா புகையிரத நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் ச. புஸ்பராசா கூறியதாவது:

சம்பவம் நடந்ததினம் அதிகாலை 3 மணிக்கு விக்கிரமரத்தின வந்து என்னைச் சந்தித்தார். அதற்கு முன் அவரைதெரியாது. பொலிஸ் முறைப்பாடு செய்ய மனைவியுடனும், மாமியுடனும் சென்றதாகவும் இன்ஸ்பெக்டர் தங்களை ஜீப்பில் கொ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எம். இராசமாணிக்கம், பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களை கலாச்சார பாலவனமாக்கும் இத்திட்டத்தை உடனடியாக அரசாங்கம் கைவிடவேண்டுமென்று குறிப்பிட்டு மிக வன்மையாக எழுதப்பட்ட படுத்துவது சரியான பரிகாரமல்ல.

சிறுபான்மை இனமான தமிழ் மக்களை பாதிக்கும் இந்த முடிவை அரசாங்கம் உடனடியாக புனராலோசனை செய்து சரியான ஒரு முடிவை எடுக்கவேண்டுமெனவும் பிரதமருக்கு எழுதப்பட்ட இக்கடிதத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கா. நி.)

# வண்ணார்பண்ணை வண்ணை நகராகும்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை என்ற பெயரை வண்ணை நகர் என்று மாற்ற வேண்டுமென்ற பிரேரணை யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. மாநரசபை முதல்வர் திரு. நாகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 23-ம் வட்டார அங்கத்தவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் கொண்டு வந்த இப்பிரேரணையை திரு. தெய்வேந்திரம் ஆமோதித்தார்.

வண்ணார்பண்ணை என்ற பெயர் சலவைத் தொழில் செய்பவர்கள் வசிக்கும்இடமென இந்தியாவிலுள்ள மக்கள் கருதுகிறார்களெனவும் இந்தப் பெயரை வண்ணை நகர் என்று மாற்றப்பட வேண்டும் என்றும் திரு சிவசுப்பிரமணியம் தனது பிரேரணையில் தெரிவித்திருந்தார்.

1880-ம் ஆண்டு தோம்பு உறுதிகளில் வண்ணார்பண்ணையை வண்ணைநகர் என்று எழுதப்பட்டுள்ளதாகவும், அக்காலத்தில் பறங்கித் தெருவிலிருந்த அந்நியநாட்டவர், சலவைத் தொழிலாளிகளை வண்ணைநகரில் குடியமர்த்தி, அவ்விடத்தை வண்ணார்பண்ணை என்று அழைத்து வந்ததாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் சாதியின் பெயரால் அழைக்கப்படும் ஊரின் பெயர்களை மாற்றியமைக்க முயற்சிஎடுத்துவரும் வேளையில், வண்ணார்பண்ணை என்ற பெயரையும் மாற்றியமைக்கவேண்டுமென்று தாம் ஏற்கனவே உள்நாட்டு அமைச்சருடன் பேசியதாகவும் திரு சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

காரைதீவு காரைநகராகவும், கரையூர் குருநகராகவும், சிலேஉ ஜலண்ட் கொம்பனித்தெருவாகவும் பெயர் மாறியிருப்பதையும் சுட்டிக் காட்டப்பட்டது.

போயாதினம் தவிர்ந்த நாட்களில் பகல் சினிமாக் காட்சி நிறுத்தப்படவேண்டும் என்று சிவசுப்பிரமணியத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒத்திவைக்கப்பட்டது.

# அந்நிய செலாவணி ரூபா 1000 ஆக அதிகரிப்பு

## பௌத்த யாத்திரிகர்களை அதிகரிக்கும் திட்டம்

கோட்டை, சனி

தென் கிழககாசிய நாடுகளுக்குப் பிரயாணஞ்செய்யும் பௌத்த யாத்திரீகர்களின் செலாவணிப் பணத்தை 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இம்முடிவு தென்கிழக்காசிய உல்லாசப் பிரயாண அபிவிருத்தி மகாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தென் கிழக்காசிய போக்குவரத்துக் குழுவொன்று நிறுவுவதற்கு மகாநாடு தீர்மானித்துள்ளதாகவும், இப்பிரதேசத்திற்குள் உல்லாசப் பிரயாணத்தை அபிவிருத்தி செய்வதெனவும், குறிப்பாகப் பல நாடுகள் பௌத்த யாத்திரீகர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளதால் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுபதெனவும் மகாநாட்டில் ஆலோசனைகள் நடைபெற்றதாக இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு நாடு திரும்பிய ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

---

ளேயேசாதி ஏற்றத்தாழ்வு இருக்கும் வரை எமது உரிமைகளையும் தேவைகளையும் பெரும்பான்மையினத்தவரிடமிருந்து எம்மால் பெறமுடியாது.

கிழக்கிலங்கையில் வாழ்பவர்களில் 75 வீதமானவர்கள் தமிழர்களாக இருந்தும் அங்கு ஆலயப் பிரவேசம் போன்ற சாதி ஏற்றத்தாழ்வுப் பிரச்னைகளுக்கிடமே இல்லை. வடபகுதியிலுள்ள ஆலய முகாமையாளர்கள், பரிபாலகர்கள், அர்ச்சகர்கள் ஆகியோர் இது விஷயத்திலாவது கிழக்கிலங்கையைப் பின்பற்றி வேசம் பற்றி விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று தீண்டாமை. தீண்டாமை என்னும் பேயை தமிழினத்தை விட்டு அடியோடு அகற்றவேண்டும். தேநீர்க்கடை, சலூன், லோண்டரி, ஆகியவைகள் தனிமனிதன் பிரச்னைகள். ஆனால் ஆலயம் சகலருக்கும் பொதுவானது. எனவே ஆலயப்பிரவேசப் பிரச்னை ஒருபொதுப்பிரச்னையாகும்.

உண்மையான பக்தி கொண்ட ஒவ்வொருவருடுக் விடப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையில் இந்தப் பிரச்னைக்கே இடமில்லை. இது ஒரு தீராத பிரச்னையாயிருந்து வருவதுதமிழினத்துக்கு ஒரு சாபக்கேடாகும்.

தமிழினத்தின் எதிர்கால நலன் கருதியாவது, ஒற்றுமையான ஓர் ஒளிபொருந்திய விடிவை நோக்கி, சகல ஆலயங்களையும், சகல சைவமக்களது தரிசனத்துக்கும் திறந்து விடவேண்டுமென கோவில முகாமையாளர்களையும், பரிபாலகர்களையும், அர்ச்சகர்களையும் தாம் வேண்டியதாகம் திரு. இராசமாணிக்கம் குறிப்பிட்டார். (கா. நி)

# 31 பேரில் 24 தமிழரை நியமித்தது ஏன்?

## ஆர். ஜி. நிதி அமைச்சரிடம் கேள்வி

கோட்டை, சனி

சிங்களத் தேர்ச்சி பெறாத 80 சத வீதமான கணக்காளர் சேவையில் இருப்பதால், அரச கரும மொழிக் கொள்கைக்கு முரணாக அலுவல்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை நிதி அமைச்சர் கவனிப்பாரா?

இவ்வாறான கேள்வியொன்றை திரு. ஆர். ஜி. சேனநாயகா, வருகிற ஏப்ரல் மாதம் 27-ம் திகதி ஆட்சிமன்றத்தில், நிதி அமைச்சர் திரு. யு பி. வன்னிநாயக்காவிடம் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அவர் தமது கேள்வியில் மேலும் சேர்த்துக் கொண்டுள்ளதாவது:-

1968-ம் ஆண்டில் கணக்காளராக சேவைக்கு நியமிக்கப்பட்ட 31 பேர்களுள் 24 பேரை தமிழர்களாக நியமித்தது ஏன்? 1969-ம் ஆண்டு முற்பகுதியில் நடாத்தவிருந்த கணக்காளரைச் சேர்த்துக் கொள்ளும் பரீட்சையை நடத்தாமல், தமிழ்த் தலைவர்களின் கோரிக்கையின் படி, 1968ம் ஆண்டு பரீட்சை பெறு பேற்றுக்கமைய, 11 பேரைச் சேர்த்துக் கொள்ள திறைசேரி முயல்வது சரியா?

சிங்களம் அரசகரும மொழியாக இருந்த போதிலும் கணக்காளரைச் சேர்க்கும் போது சிங்கள அறிவு பற்றி கவலியாமல் மேற்கூறிய கணக்காளரைச் சேர்த்தது ஏன்?

மேற்கூறிய கேள்விகளைக் கேட்கும் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இவற்றை சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோருவார்.

# ஓய்வு பெற்ற அதிபருக்கு தனிச் சிங்களத்தில் கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஓய்வு பெற்ற உதவி அதிபர் ஒருவருக்கு பென்ஷன் விஷயமாக திறைசேரியிலிருந்து அனுப்பப்பட்ட கடிதமொன்று தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. இதை வாசித்து புரிந்து கொள்ள முடியாத குறிப்பிட்ட ஆசிரியர் மிகவும் கஷ்டமுறவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற இந்த உதவி அதிபருக்கு திறைசேரியிலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டதாகவும், இதுபற்றி தீவுப்பகுதி எம். பி. யிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் கடிதத்தில் தனிச் சிங்களம் மட்டும் இடம் பெற்றது குறித்து சம்பந்தப்பட்ட ஆசிரியர் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

# 30-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம், கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தாரின் 30-வது ஆண்டுவிழா வருகிற ஏப்ரல் மாதம் 1-ம் திகதி யாழ் மாநகரசபை முதல்வர் திரு. நாகராசா தலைமையில் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில நடைபெற விருக்கிறது.

கண்ணன் கோஷ்டியினரின் இன்னிசைக் கச்சேரியும், கொழும்பு ராஜ் நகைச்சுவை மன்றத்தினரின் நாடகமும், செல்வி லீலா நாராயணனின் நடன நிகழ்ச்சி முதலியனவும் இடம் பெறும் இவ்விழாவில், உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளையும் கலந்து கொள்ளுகிறார். திருமதி முருகேசம்பிள்ளை கலை நிகழ்ச்சிகளில வெற்றி பெறும் கலைஞர்களுக்கு பரிசிலகளை வழங்குவார்.

# உலகத் தலைவர்கள் கூடுகின்றனர்

வாஷிங்டன், மார்ச் 29

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஐஸனோவரின் இறுதிச் சடங்குகளில் உலகின் பல நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்வதற்காக வாஷிங்டன்வந்து கொண்டிருக்கிறார்கள்.

உலக மக்களின் இதயங்களில் ஐஸனோவர் என்றும் வாழ்வார் என அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

---

போய் மருமகனைக் கூட்டி வந்தேன். அவர் வந்துபட்டணத்தில் நின்றார். நான் வீட்டுக்கு வந்தேன். இரவு 10 மணிக்கு மருமகன் வீட்டிற்கு வந்தார். தோமஸ் பலாத்காரம் செய்ததாக மகள் என்னிடம் கூறியதை அவரிடம் சொன்னேன். அன்று 6 மணிக்கு மற்றொருவருடன் வந்து, போனபின் இரவு 10 மணிக்குத்தான் வந்தார். காரில் மருமகன் என்னையும் மகளையும், வவுனியா பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றார், நான் வெளியில் நின்றேன், அவர்கள் உள்ளே சென்றனர். நாங்கள் வீட்டுக்குப்போக வெளிக்கிட இன்ஸ்பெகடர்ஜீப் கொண்டு வந்தார்- சிங்களத்தில் மருமகனுடன் எதிரி கதைத்தார். எனக்கு விளங்கவில்லை. மருமகன் எங்களை ஜீப்பில் ஏறட்டுமாம் என்று சொன்னார். எனக்கு எதிரியை நன்கு தெரியவில்லை. எதிரி ஜீப்பை ஓட்டினார். பொலிஸ் ஒருவர் பக்கத்தில் இருந்தார். வாடிவீட்டிற்கு ஜீப் சென்றது. அதன் பின் தோமஸ் வீட்டைக் காட்டும்படிஎதிரிகேட்டார். நாங்கள் காட்டினோம். ஜீப் அங்கு நிற்கவில்லை. ஜீப்பை எங்கள்வீட்டடியில் நிறுத்தினார்கள். எதிரி சிங்களத்தில் சொல்ல, மருமகன் என்னை இறங்கச்சொன்னார்.

காரரைக்கொண்டுதான் சம்பவத்தைத் தெரிவித்தேன் என்றீரா?- ஞாபகமில்லை.

வழ: அப்படி பதியப்பட்டிருந்தால் சரியா-? ஆம்.

வழ: பக்கத்து வீட்டுக் காரருக்கு சம்பவத்தை சொல்லியிருந்தால் மருமகனுடன் கூடி வந்தவருக்கும் சொல்லியிருக்கலாமே?- பக்கத்து வீட்டுக்காரர் என் சொந்தக்காரர் இராசையா. மருமகனுடன் வந்தவர் அந்நியர்.

வழ: உமது விருப்பத்திற்கு மாறாக மகள் திருமணம் செய்தார்?- மகள் அவரை விரும்பினார். அதனால் செய்துவைத்தேன்.

வழ: மகள் கூடிக்கொண்டு ஓடவில்லையா?- இல்லை.

வழ: உமது மகள் விளக்கமறியலில் இருந்தாரா?- ஒரு கிழமை இருந்தார்.

வழ: எதற்காக?- மருமகனுடன் கூடிப்போனதற்கு பிறகு நான் சம்மதித்ததால் திருமணம் செய்து வை தேன்.

வழ: 5 பேர் உமது மகளை கடத்திச் சென்றதாக உமது மகள் பொலிசில் புகார் செய்தாரா?- அப்படி ஒன்றுமில்லை.

வழ: தோமஸ் பலாத்காரம் செய்த வழக்கு கீழ் கோர்ட்டில தள்ளுபடி செய்யப்பட்டது?- ஆம்.

மேலதிக மாவட்ட நீதி அதிகாலை 3 மணிக்கு விக்கிரமரத்தின வந்து என்னைச் சந்தித்தார். அதற்கு முன் அவரைதெரியாது. பொலிஸ் முறைப்பாடு செய்ய மனைவியுடனும், மாமியுடனும் சென்றதாகவும் இன்ஸ்பெக்டர் தங்களை ஜீப்பில் கொண்டு சென்று வழியில் தன்னையும் மாமியையும் இறக்கி விட்டு மனைவியை கொண்டு சென்று விட்டதாகவும் கூறினார். என்னை புத்திமதி சொல்லும்படி கேட்டார். பயந்து காணப்பட்டார்.எம்.பி. யிடம் போய் முறையிடும்படி சொன்னேன். ரோட்டில் செல்ல பயமாக இருப்பதாக கூறினார். அனுராதபுரம் ஏ. எஸ். பி.யிடம் போகச் சொன்னேன். அதிகாலை 3-30 மணிக்கு ஒரு புகைவண்டி இருந்தது. அது காலை 5-30 மணிக்கு அநுராதபுரம் செல்லும். எதிரியை முதல் தடவையாக கீழ்க் கோர்ட்டில் கண்டேன்.

மன்னார் உதவி பொலிஸ் சுப்பிறிண்டன் பொன்சேகா கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் மறுநாள் 1 மணிக்கு விக்கிரமரத்தின வந்து சம்பவத்தை சொன்னார். அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன்பின் வவனியாவிற்கு அவருடன் சென்றேன். அவரின் வீடு பூட்டப்பட்டிருந்தது. ஏப்ரல் 1-ம் திகதி வாக்குமூலம் அளிக்கத் தயாராக இருக்கும்படி அவரிடம் சொன்னேன். ஏப்ரல் 1-ம் திகதி எனது முன்னிலையில்இன்ஸ்பெக்டர் ஹெரத், அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தார். எதிரியை அன்று காணவில்லை. ஏப்ரல் 3-ம் திகதி எதிரி கைது செய்யப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் ஹெரத் கார்ஜன்ட்ராஜபக்சா, சிறைசாலை அதிகாரி திரு. கதிரவேலு கதிரேசு, மாஜிஸ்திரேட் கோர்ட் பீயோன் தம்பிப்பிள்ளை சிறில் ஆகியோர் சாட்சியமளித்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## தலைமன்னார்—தனுஷ்கோடி நீச்சலில்

# இலங்கை வீரருக்கு மூன்றாவது இடம்

சென்னை, மார்ச் 29

நேற்று தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையே நடைபெற்ற 22 மைல் நீள நீச்சல் போட்டியில் இலங்கை வீரர் திரு. ஜே. நாணயக்கார மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் இலங்கையிலிருந்தும் பாரதத்திலிருந்தும் பதினான்குபேர் பங்கு பற்றினர்.

இந்திய ரயில்வேயில் கடமையாற்றும் வைத்தியநாத் என்ற 24 வயது இந்திய வீரர் முதலாவது இடத்தை பெற்றது தெரிந்ததே.


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




டொலர்
அலுமினியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுன்னுகம் பொலிஸ் நிலையத்துக்கு எதிர் ஒழுங்கையில்உள்ள மலையான் கலட்டி என்ற காணியில் 12 பரப்பு வீட்டுடன் விற்பனைக்குஇருக்கின்றது. விபரங்களுக்கு அ. வீரசிங்கம், கீரிமலை ரோட், மாவிட்டபுரம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 797

முட்டையிடும் ஆர். ஐ. ஆர். (R. I. R,) வயிற்லெகோன் கோழிகள் விற்பனைக்குண்டு. 373,3, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 793

### தவறிவிட்டது

A. A. மரியாம்பிள்ளை என்று பெயரிடப்பட்டுள்ள புத்தகங்கள் அடங்கிய பெட்டி ஒன்று 27-ந் திகதி காலை யாழ்தேவியில் மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தவறி எடுத்தவர்கள் ''ஈழநாடு'' காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். 800

### தேவை

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள அரிசி, மா மில்லில் வேலை பார்ப்பதற்கு கஷியர் அல்லது மனேஜர் தேவை. விளம்பர இல. 801, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 801



இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - எல். விஜயலக்ஷ்மி நடித்த

**சபாஷ் தம்பி**



மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - விஜயலக்ஷ்மி நடித்த

**எதிரிகள் ஜாக்கிரதை**



**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜஸ்ரீ நடித்த

**அனுபவி ராஜா அனுபவி**



## பனை ஓலை கேள்வி விளம்பரம்

வலிகாமம் மேற்கு பலநோக்கக் கூட்டுறவுச்சங்க சமாச கல்லுண்டாய் உப்பளத்திற்கு 1969-ம் ஆண்டுக்கு 20,000 பனை ஓலைகள் தேவைப்படுகின்றன.

நிபந்தனைகளுக்கு அமைய கொடுக்க விரும்புவோர், சமாசத்தில் இதற்காக உள்ள பத்திரத்தைப் பெற்று, 7-4-69-ம் திகதிக்கு முன்பு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
வலிமேற்கு ப. நோ. கூ. ச. சமாசம்,
1247 சங்கானை.



கலைஞர் மு கருணாநிதி அவர்களின்

**முரசொலி**

தினஏடு
விற்பனையாகின்றது!

**அன்பு புத்தகசாலை**

27, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## 40 வருஷங்களின் பின் ஓய்வு

வல்வெட்டித்துறை சனி

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிவரும் திரு. இ. துரைராஜா நாற்பதுவருடசேவையின்பின்னர் இளைப்பாறவிருக்கிறார்.

1929-ம் ஆண்டு உதவி ஆசிரிய சேவையை ஆரம்பித்த இவர் 56-ம் ஆண்டு தொடக்கம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார். இவரது சேவைகளை பாராட்டுவதற்காக பழைய மாணவ சங்கத்தினர் ஏற்பாடுசெய்துவருகின்றனர்.

## ஐஸ் வழங்க மறுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் அங்கத்தவர் அல்லாதவர்களுக்கு ஐஸ் வழங்க மறுக்கப்படுகிறதாம். இதனல் குருநகர் மீனவர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

ஐஸ் வாங்கச் செல்லும் மீனவர்கள் கூட்டுத் தாபனத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனராம். இதுபற்றி இப்பகுதி மீனவர் திரு. எஸ். ஏக்ஸ். மார்ட்டினிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் கூட்டுத்தாபன அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார். (ந, நி.)

கனிட்ட தொழில்நுட்ப நிலைய

# வணிகப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிலையத்தில் வணிகம் தமிழ் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

**கணக்குப் பதிவாளர், சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் வணிக தகுதிப் பத்திரம்.**

ஆ. த. சித்திரவேல், க. தங்கேஸ்வரன், செல்விகள் இ. இரத்தினபூபதி, க. கனகாம்பிகை, க கோமதிதேவி ந. சரோஜினிதேவி, பா. சிவகுருநாதன், சி. செலஸ்மேரி, நா. செல்வநாயகி, செ. செல்வராணி, இ. ஞானேஸ்வரி, ச. திலகரத்தினம், நா. பி. மகேஸ்வரி, ந. ஜெயமலர் தேவி.

**கணக்குப் பதிவாளர் வணிக தகுதிப் பத்:**

பே. கனகரத்தினம், ஆ. குணரத்தினம், ந. சின்னத்துரை. செல்விகள் ச. அமராவதி, அருளம்மா, இ. கமலாதேவி, அ. மு. சலீம், ம. சிவலிங்கம், கு. புண்ணியலிங்கம், செ. பூபாலசிங்கம், மா. மரியதாஸ், நா. வேலாயுதபிள்ளை, சே. வைகுந்தநாதன், வே ஜெகதீசன், ச. ஸ்ரீபதி.

**சுருக்கெழுத்தாளா தகுதிப் பத்திரம்.**

செல்வி கமலாதேவி, க. அழகதுரை, ந. தர்மலிங்கம்

**கணக்குப் பதிவாளர்உயர்வணிக தகுதிப் பத்திரம்**

ச. சந்திரலேகா, கு சிவசுப்பிரமணியம், க பத்மநாதன், சி. மகேந்திரநாதன, க. யேசுகாவலன், கு. வி யகமூர்த்தி, செல்வி அ. நீலாவதி.

**சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் உயர் வணிக தகுநிப் பத்திரம்:**

கா. பொ. கமலநாதன், க. சிவராசா, செல்விகள் த, கௌரியாம்பாள், இ. சத்தியவதி, மு. சிவமணி, மு. விஜயமணி.

**சுருக் - தட்டெழுத்தாளர் வணிக தகுதிப் பத்:**

சி. இரகுநாதன், செ. ஜெயசேகரம், செல்விகள் மேரி ஞானரோஸ், க. யோகேஸ்வரி, செ. கணபதிப்பிள்ளை, வே. காந்தமூர்த்தி, சி. மகேந்திரநாதன. க. யேசுகாவலன், கு. விஞயகமூர்த்தி, செல்விகள் சி. சரஸ்வதி, க. நிர்மலாம்பிகை, அ. நீலாவதி, அ. ல. மஞ்சூரு.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 30—3—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12 00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு, 6-45 பாவளம், 7-00

## பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

நாவற்குளி சனி

நாவற்குழி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் இவ் வருடத்திற்கான நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு கந்தையா உபதலைவர் திரு சோ. சடாட்சரம் (கிராமசபைத் தலைவர்) காரியதரிசி திரு க. சங்கரப்பிள்ளை உப காரியதரிசி திரு அ. சுப்பையா தனதிகாரி திரு த. தியாகராசா கணக்குப் பரிசோதகர் திரு ம. பொன்னையா 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

## ஆசிரிய நல்லுறவு நிர்வாகிகள்

உடுவில், சனி

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய ஆசிரிய நல்லுறவு மன்ற வருடாந்தக்கூட்டத்தில் பின்வருவோர் புகிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஞானசிகாமணி அன்னப்பா, செய

## தற்கொலை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால்வாசியான தம்பையா முத்துலிங்கம் (வயது 22) தனது இளம் மனைவிக்கும் தனக்கும் ஏற்பட்ட சில குடும்பப்பிரச்னை காரணத்தினல் வாழ்க்கையில் விரக்திகொண்டு கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் முல்லைத்திவுப் பகுதிமரண விசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா நடத்திய விசாரணையில் இது தெரியவந்தது. தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கிளிநொச்சி த. ஈ. வா. மு.

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சி தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் பொதுக்கூட்டம் பாராளு மன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்திரு. த. மகாலிங்கசிவம், செயலாளர் திரு. உருத்திரசிங்கம், பொருளாளர் திரு. நல்வேல்நாதன். 15 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி.)

## தண்ணீர்க்கஷ்டம் நீங்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டைநீக்க கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நடவடிக்கை எடுத்ததன் பேரில் குடியிருப்பு வாசிகளுக்கு லொறி மூலம் தண்ணீர் விநியோகிக்க உள்ளூராட்சி அமைச்சு சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது. தண்ணீர் விநியோகம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படுமென நம்பப்படுகிறது.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் இந்து புதுவருடத்தன்று கைதடி மத்தி சேதுகாவலர் வித்தியாசாலைமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

0 0

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு வட்டுவாகல் இளங்கதிர் சனசமூக நிலை

மேல்சபையில்—

# "தமிழ் 'டெலிபோன் டிரக்டரி' யாழ்ப்பாணத்தில் அச்சிட்டதுஏன்?'

நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

கொழும்பு, சனி

''தொலைபேசி பெயர்க் கொத்து (டெலிபோன் டிரெக்டரி) தமிழில் அச்சடிக்கும் வேலையை, அரசாங்க அச்சகமே மேற்கொள்ளாமல், யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீ லங்கா புத்தகசாலை அச்சகத்தினருக்கு வழங்கியது ஏன்?'' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செனட்டர் ஏ. ஆர். எம். ஹமீம்கேள்வி கேட்டதோடு நிற்காமல் சிங்கள தமிழ் தொலைபேசிப் பெயர்க் கொத்துக்களைச் சபையில் காட்டி, ''தமிழ் எழுத்துக்கள் - குருடன் கூட படித்துவிடக்கூடிய அளவு பெரிதாக இருக்கின்றவேளையில் சிங்கள எழுத்துக்களைப் படிக்க பூதக்கண்ணுடியின் உதவி கட்டாயம் தேவைப்படுகிறது'' என்று சொல்லிவிட்டு ''சிங்கள, தமிழ் கொத்துகளை அச்சடிப்பதில கூட இந்த அரசாங்கம் பாரபட்சமாக நடந்துகொள்வது ஏன்?'' என்று கேட்ட பொழுது, அரசாங்கக் கட்சி செனட்டர்கள் 'கொல' லெனச் சிரித்தார்கள்.

இது நேற்று மேலசபைக் கூட்டம் நடந்தபோது நடைபெற்ற முதல நிகழ்ச்சியாகும்.

செனட்டர் ஏ, ஆர். எம் ஹமீமின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் சமரதுங்கா பின்வருமாறு கூறினர்.

''சிங்கள ஆங்கில தொலைபேசிப் பெயர்க் கொத்துக்களை அரசாங்க அச்சகமே அச்சிட்டது. இருமொழிகளிலும் மொத்தம் 65,000 பிரதிகள் அச்சிடப்பட்டன. அவற்றிற்கான செலவு 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகும்.

தமிழ்ப்பெயர்க்கொத்து யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா புத்தகசாலை அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 811 பக்கங்கள் கொண்ட இப் பெயர்க்கொத்தின் 5 ஆயிரம் பிரதிகள் அச்சடிப்பதற்கு 45 ஆயிரத்து 706 ரூபாய் கொடுக்கப்பட்டது.

இந்தப் பதிலைக் கேட்ட பின்னர்தான் செனட்டர் ஹமீம், ஆரம்பத்தில் கூறியவாறு, அரசாங்க அச்சகமே தமிழில் அச்சடிப்பதையும் ஏற்றுக்கொள்ளாமல் தனியார் துறைக்கு அந்த வேலையைக் கொடுத்தது ஏன் என்று கேட்டார்.

### நீதிராஜாவின் விளக்கம்

டாக்டர் என். எம். பெரேரா, மார்ச் மாதம் 21-ம் திகதி ஆட்சி மன்றத்தில் பேசியபொழுது ''பீடி உற்பத்தியாளர் சங்கத்தில் 10 லட்ச ரூபாய் மோசடி நடந்திருக்கிறதென்றும், அதற்குக் காரணமானவர் திரு. டி. நீதிராஜாதான்'' என்றும் பொருள்பட பேசியிருந்தார். அதற்கு செனட்டர் டி. நீதிராஜா இன்றையகூட்டத்தில் பதில்கொடுத்தார்.

''எந்தவித உண்மையும் அற்ற, முற்றிலும் தவருன குற்றச்சாட்டை டாக்டர் என். என். பெரேரா தன் மீது சுமத்தியதுகண்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்ததோடு, ஆழ்ந்த வேதனையுமடைந்தேன்'' என்று தொடங்கிய செனட்டர் நீதிராஜா பீடி உற்பத்தியாளர் சங்சத்தில் டாக்டர் என் எம். பெரேரா குறிப்பிட்டபடி மோசடிகள் எதுவும் நடைபெறவில்லையென்றும், மாருக பீடி உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் டாக்டர் என். எம். பெரேராவின் குற்றச்சாட்டைப் பூரணமாக மறுத்திருப்பதோடு, தன்மீதுபரிபூரண நம்பிக்கை வைத்துத் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பதாகவும் சொல்லி, அந்தத் தீர்மானத்தையும் சபையில் வாசித்துக்காட்டினர்.

''டாக்டர் என். எம். பெரேராபோன்ற பிரமுகர்கள் பிறருடைய வாழ்வைக் களங்கப்படுத்தும் இப்படியான விஷயங்களில் சர்வசாதாரணமாக ஈடுபடுவது சரியல்ல'' என வேண்டிக்கொண்ட செனட்டர் நீதிராஜா, 'கண்டபடி பிறருடைய வாழ்வில் தலையிட்டு, அவர்களுடைய கௌரவத்தைக்குறைக்கும் வேலையைத் தவிர, எமது அரசியல்வாதிகளுக்கு வேறு வேலை இல்லையா?' என்றும் கேட்டார்.

### சட்ட திருத்த மசோதா

அடுத்து நீதியமைச்சர் திரு ஏ. எப். விஜேமானே, குடியியல் வழக்குச் சட்டத்தில் திருத்தமொன்றைக் கொண்டுவந்தார்.

இதுவரை 2500 ரூபாயும் அதற்கு அதிகமான பெறுமதியுமுடைய காணிச்சொந்தக்காரர் ஒருவர் உயில் எழுதிவைத்துவிட்டோ, எழுதி வைக்காமலோ இறந்துபோனுல் அவரது காணிகளை அவ்டுக்குப்பின் பராமரிப்பவர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். இந்தத் திருத்தத்தின்படி '2500 ரூபா பெறுமதியான சொத்து' என்ற சொற்றொடரை, '20000 ரூபாவரை பெறுமதிமான சொத்துக்கள்' என்று மாற்றப்படும்.

அதாவது இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமான பின்னர் 20 ஆயிரத்துக்கும் இதற்குமலான மதிப்புடைய சொத்துக்களுக்குத்தான் 'பூதல் வழங்கும்' பூதல் வரியும் உண்டு.

இந்தத் திருந்த மசோதா எவ்வித வாதப்பிரதிவாதமுமின்றி நிறைவேற்றப்பட்டது.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது, செனட்டர் ரெஜிபெரேரா, பாடசாலைகளுக்கான விடுமுறைகளில் ஒரு ஒழுங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் எல்லாப் பாடசாலைகளும் ஏறத்தாழ ஒரே காலத்தில் விடுமுறை விடுவதுதான் பெற்றோருக்கு உதவியாக இருக்கும் என்றும் கூறினர்.

செனட்டர் ஏ. ஆர். எம், ஹமீம், மகாவலிகங்கையை வடக்குக்கும், கிழக்குக்கும் மட்டும் திருப்பாமல், வடமேற்கு, வடகிழக்கு மாகாணங்களுக்கும் திருப்பிவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மேல்சபையின் அடுத்த கூட்டம் ஏப்ரல் 21-ந் திகதி நடைபெறும்.

## செய்திச் சுருக்கம்

### வேலைநிறுத்தம்

தோட்டத்துரை, தொழிலாளர்களைக் கண்டித்தாராம். இதனுல் பூண்டுலோயா மல்லிகைப் பூந்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளார்கள்.

0 0 0

மீன் விற்பனை நிலையம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜஸ்ரீ
நடித்த
அனுபவி ராஜா
அனுபவி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, & 9-45
YOU LIVE ONLY
ONCE
(Spy Film)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Mickey Hargilay,
Lucia Paoli
in
7 GOLDEN
WOMEN AGAINST
TWO 07


கேட்கப்படுகின்றனராம். இதுபற்றி இப்பகுதி மீனவர் திரு. எஸ். ஏக்ஸ். மார்ட்டினிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் கூட்டுத்தாபன அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார். (ந, நி.)


ராஜா 76வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

REGAL at Jaffna
Daily4-45, 7 & 9-45 P.m
Carl Reiner, Eva Marie Saint
in
THE RUSSIANS ARE
COMING......

2-வது ஜனத்திரள் வாரம்
கெப்பிட்டல் பிளாஸா ஸ்ரீ கிருஷ்ணா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

5-வது வாரம்
வெலிங்டன் (யாழ்.நகரில்)

சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

கிங்ஸ்லி
(கொழும்பு)
சிவாஜி ★ சாவித்திரி ★ தேவிகா
நடித்த
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென்கலர்)


பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு, 6-45 பா வளம், 7-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி.

## இன்றைய பலன்

30-3-69
ஞாயிற்றுக்கிழமை

திதி- துவாதசி இரவு 1-15 மேல் திரயோதசி.
நட்சத்திரம்- மகம்.
ராகுகாலம்- 4-43—6-13.
சுபநேரம்- 9--13—10-43.

இன்று பிறந்தவர்களுக்கு— கற்றதால்பலன் கைமேல் கிடைக்கும். பொறியியலாளர் போற்றப்படுவார்கள். சிலர் வெளிநாட்டுப் பயணத்தையும் மேற்கொள்வார்கள். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஆர்வம். காதல்வாழ்க்கையில் வழமான பலன்தரும் நல் ஆண்டாகும்.

மேஷம்- உதவும் மனப்பான்மை, உண்மையில் நாட்டம்.

ரிஷபம்- தொழில் சீர்பெறும் ஆனந்த நிலை

மிதுனம்-பிள்ளைப்பாசம் கொள்ளை இன்பம்.

கடகம்- சந்தேகப் பார்வை, சமயோசித புத்தி.

சிம்மம்- குடும்பக்கவலை குறுக்குவழித் தலையீடு.

கன்னி- தானிய விருத்தி தருமசிந்தை.

துலாம்- குடும்பத்தின் புயல், துன்பத்தின் நிழல்.

விருச்சிகம்- வாகன சுகம், வரவும் பெருகும்.

தனுசு- பாசப்பிணைப்பு, பரவசநிலை.

மகரம்- உறவாடிக் கெடுப்பர் உசாராக இரு

கும்பம்- கலையின் பெயரால் காதல்வலை.

மீனம்- துஷ்டர் உறவு, தூரத்துச்செய்தி.

—சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய ஆசிரிய நல்லுறவு மன்ற வருடாந்தக்கூட்டத்தில் பின்வருவோர் புகிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஞானசிகாமணி அன்னப்பா, செயலாளர்: திரு. வி. ஐயாத்துரை, தனாதிகாரி: திருமதி ஆர். ஜெயநாயகம்' கணக்குப்பரிசோதகர்: திரு. வி. பரிபூரணனந்தசர்மா.

## தமிழரசுக்கிளை நிர்வாகிகள்

உடுவில், சனி

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தாவடி கிளையின் புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. வி. தர்மலிங்கம் பா. உ., உபபோஷகர் திரு. கே. அப்புக்குட்டி தலைவர் திரு. சி. த. நடராசா, உப-தலைவர்கள் திருவாளர்கள் க. தணிகாசலம், ச. தர்மலிங்கம். செயலாளர் திரு. செ. இராசதுரை, உப-செயலாளர் திரு. சி. சுப்பிரமணியம், தனாதிகாரி திரு. அ. சண்முகநாதன்

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்மேலும்15 பேர் நிர்வாக சபை உத்தியோகத்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ரூ. 700 பிணையில் செல்ல அனுமதி

வல்வெட்டித்துறை, சனி

துன்னாலை தெற்கைச் சேர்ந்த வே. இராசதுரை, க. ஜெயம், க. சிவயோகம் வே.செல்வராசா ஆகியோர் சண்டையிட்டதாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரிகள் நால்வரையும் ரூபா 700 பிணையில் செல்லுமாறும், அடுத்த மாதம் 7ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## இலட்சநாம அர்ச்சனை

ஊர்காவற்றுறை சனி

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் ஏப்ரல் மாதம் 9-ம் திகதி முதல் 11-ம் திகதி வரை இலட்சநாம அர்ச்சனை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மகா சங்கா பிஷேகம் குளிர்த்தி என்பனவும் நடைபெறும்.

வரும் இந்து புதுவருடத்தன்று கைதடி மத்தி சேதுகாவலர் வித்தியாசாலைமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது,

0 0

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு வட்டுவாகல் இளங்கதிர் சனசமூக நிலையத்தின் மூன்றுவது ஆண்டு விழா வருகிற மாதம் 13-ந் திகதியன்று கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விழாவில் மரதன்ஓட்டம், சயிக்கிள் ஓட்டம், கரபந்தாட்டப் போட்டி ஆகியன இடம் பெறும்.

காங்கேசன்துறை

## ஆஸ்பத்திரி இடம் மாறும்

அளவெட்டி, சனி

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி அதிவிரைவில் சுகாதார சௌக்கிய நிலையமாக மாறவிருக்கிறது.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி, தெல்லிப்பளையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டபின் தெல்லிப்பளையில் இயங்கி வரும் சுகாதார சௌக்கிய நிலையம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரி இருந்த இடத்தில் இடம்பெறவுள்ளது.

## மேற்பார்வையாளர் இல்லை

சங்கானை, சனி

மானிப்பாய் சுகாதாரக் கந்தோரில் தேசிய பால் விநியோக மாவட்ட மேற்பார்வையாளர் இன்மையால் பால் விநியோகம் சம்பந்தமான வேலைகள் தடை ஏற்பட்டுள்ளன. இங்கு கடமையாற்றிய மேற்பார்வையாளர் இடமாற்றம் பெற்று பல மாதங்களாகிடும் அவரது இடம் நிரப்பப்படாமையே இதற்குக் காரணம்.

## புதிய ஜே. பி.

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் திரு. ஆர். நவரத்தினம் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைவரான இவர் ஒரு பிரபல வியாபாரியாவார். முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் சமாதான நீதிபதியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்தப் பதிலைக் கேட்ட பின்னர்தான் செனட்டர் ஹமீம், ஆரம்பத்தில் கூறியவாறு, அரசாங்க அச்சகமே தமிழில் அச்சடிப்பதையும் ஏற்றுக்கொள்ளாமல் தனியார் துறைக்கு அந்த வேலையைக் கொடுத்தது ஏன் என்று கேட்டார்.

மசோதா

அடுத்து நீதியமைச்சர் திரு ஏ. எப். விஜேமானே, குடியியல் வழக்குச் சட்டத்தில் திருத்தமொன்றைக் கொண்டுவந்தார்.

இதுவரை 2500 ரூபாயும் அதற்கு அதிகமான பெறுமதியுமுடைய காணிச்சொந்

## பனம்பழம், நல்லெண்ணெய் மோர் பற்றி விளக்கம்

சுழிபுரம் சனி

எமது தமிழ் வாலிபர்கள் சகல விளையாட்டுத் துறையிலும் முதன்மையாக விளங்கியதுடன் ஒலிம்பிக்போன்ற உலக விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு அநேக பரிசுகளை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர். ஆனல் இன்று அந்த நிலை மாறிக்கொண்டு போகிறது. இந் நிலைமையை உடன் மாற்றியமைக்க வேண்டும், இவ்வாறு வட்டுக்கோட்டை வட்டார பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற விழாவில்கல்வி அதிகாரி திரு. ச. சபாபதி பேசுகையில் யாழ்ப்பாண மக்கள் மோர் நல்லெண்நெய் பனம்பளம்போன்றவற்றை உபயோகிக்காமல் விட்டதாலேயே நோயாளர்களாக கானப்படுகின்றனர்.

சுகதேசிகளாக வாழ விளையாட்டு எவ்வகையில் அவசியமோ அதேபோன்று இவை மூன்றும் அவசியமானது. நாம் பழைய பாரம்பரியங்களை கைவிட்டு நோய்வாய்ப் படலாகாது என்றார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினர். வட்டார கல்வி அதிகாரி திரு பி. எஸ். குமாரசுவாமி நன்றியுரை கூறினர்.

## பொலிசாக நடிக்கிறர்களாம் கோயிலில் வாலிபர்

வல்வெட்டித்துறை, சனி

தங்களை பொலிசார் எனக் கூறிக்கொள்ளும் வாலிபர்கள் செல்வச்சந்நிதி கோயிலில் தங்கியிருக்கும் வயோதிபர்களுடன் சேஷ்டைகள் விடுகிறர்களாம். இவ்வித சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் சில வாலிபர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தங்கள் கவனத்தை திருப்பியுள்ளனர்.

ஆலய மடங்களில் படுத்துறங்கும் வயோதிபர்களையும், வயோதிப மாதர்களையும், குருடர்செவிடர்களையும் பயமுறுத்தும் இவர்களின் நடமாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகக்கூறப்படுகிறது. இரவு வேளையில் இங்கு செல்லும் வாலிபர்கள் மடங்களுக்குள் படுத்திருக்கும் பெண்களுக்கு லைட் அடித்து கற்களையும்வீசுவதுடன் கோயில் கிணற்றினுள் குப்பையையும் எறிகிறர்களாம்.

பத்திரிகைகள் பற்றி ஆலோசிக்க

## சி. சுப்பிரமணியத்துக்கு கருணாநிதி அழைப்பு

சென்னை, மார்ச்29

கட்சிப்பத்திரிகைகள் கண்ணியக்குறைவாக பிறகட்சித் தலைவர்களைத் தாக்கி எழுதுவதையும் வேறு முறைகேடான பிரசாரங்களில் இறங்குவதையும் கட்டுப்படுத்தும்வகையில் பொது நெறியொன்றினை உருவாக்குவதற்கு தாம் விருப்பம் கொண்டிருப்பதாகவும் இதுபற்றி ஆலோசிப்பதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சி. சுப்பிரமணியத்தைதாம் அழைத்திருப்பதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு கீழ் சட்டசபையில் கூறினர்.

எதிர்க்கட்சித்தலைவர்திரு. கருத்திருமன், கட்சிப்பத்திரிகைகள்பற்றி எழுப்பிய ஒரு பிரச்னையொன்றின் போது குறுக்கிட்டுப் பேசிய பொழுதே திரு. கருணாநிதி மேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

தோட்டத்துரை, தொழிலாளர்களைக் கண்டித்தாராம். இதனுல் பூண்டுலோயா மல்லிகைப் பூந்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளார்கள்.

0 0 0

### மீன் விற்பனை நிலையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீன்களை வசதியாக விற்பனைசெய்வதற்காக மட்டக்களப்பில் மீன் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஒழுங்குகளை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

0 0 0

### பரமஹம்ஸர் விழா

அனுராதபுரம் விவேகானந்த சபையின் ஆதரவில் இராமகிருஷ்ண பரஹம்ஸர் விழா அனுராதபுரம் விவேகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

0 0 0

### 'பிரேமா' போகிறர்

மட்டக்களப்பு காரைதீவில் நூல்நிலையம் ஒன்றைத் திறந்துவைக்க அங்கு விஜயஞ்செய்யும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா இரண்டு தினங்கள் அங்கு தங்கிநின்று அம்பாறை மாவட்டத்துக்கும் விஜயஞ்செய்வார்.

0 0 0

### 'பொலிஸாரைக் கூட்டுக'

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு இன்னும் மேலதிக பொலிஸாரை அனுப்பிவைக்குமாறு ஊர்காவற்றுறைப் பட்டினசபையினர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளனர்.

0 0 0

### "தமிழ்பல்கலைக்கழகம் வேண்டும்'

தமிழைப் போதனமொழியாகக்கொண்ட, தமிழுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமைத்துத் தருமாறு கல்வியமைச்சரைக் கோருவதென்ற தீர்மானம் திருமலை பெருந்தெரு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

0 0 0

### ஓய்வுபெறுகிறர்

பட்டிருப்பு வட்டார வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய திரு. பொன்னம்பலம் இராசரத்தினம் தமது 42 வருட சேவையின் பின்னர் இம்மாதத்திலிருந்து ஓய்வுபெறுகிறர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸனோவர் மறைவுக்கு உலகெங்கும் கவலை

## தனித்துவமிக்க தலைவர்என அதிபர் நிக்ஸன் அஞ்சலி

வாஷிங்டன், மார்ச் 29

**அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜெனரல் ஐஸன்ஹோவர் காலமானார். நீண்ட நாட்களாக இருதய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த அவர் வாஷிங்டனிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்றுவந்தார். நேற்றிரவு காலமான ஜெனரல் ஐஸனோவருக்கு .8 வயது.**

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஜெனரல் ஐஸனோவர் காலமான செய்தி வெளியானவுடன் உலகின் பலபாகங்களிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அதிபர் நிக்ஸனுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

### பிரிட்டிஷ் மகாராணி

பிரிட்டிஷ் எலிஸபெத்மகாராணி விடுத்துள்ள ஒரு செய்தியில் உலகயுத்தத்தின போது நேசநாட்டுப் படைகளை வெற்றியைநோக்கி வழி நடத்திச் சென்ற மனிதர் என்று ஐஸனோவரை உலகம் ஒருபோதும் மறந்துவிடாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

### டிகால் டிட்டோ

ஐஸனோவரின் யுத்த கால சகாக்களான பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகாலும் யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும் அவர் மறைவுக்கு கவலை தெரிவித்துள்ளனர். ஜெனரல் டிகால் ஐஸனோவரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ளப் போகவிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

### ரஷ்யா அனுதாபம்

ஜெனரல் ஐஸனோவர் மரணம் குறித்து ரஷ்யாவும் அனுதாபம் தெரிவித்துள்ளது. ஐ. நா.விலுள்ள பிரதிநிதி காரியாலயத்திலிருந்து விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் இந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளின் தலைவர்களும், பாப்பாண்டவரும் அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

### ஐ. நா.வுக்கு ஆதரவு அளித்தார்

ஜெனரல் ஐஸனோவர் ஐ நா.வின் வளர்ச்சிக்கு பெரிதும் ஆதரவு அளித்தார். அணு சக்தியை உலக அமைதிக்காகப்பயன்படுத்தவேண்டும் என்பதற்கான உலக ஒத்துழைப்புக்கு அவர் பாடுபட்டவர் என்று ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

### திங்களன்று நல்லடக்கம்

ஜெனரல் ஐஸனோவரின் பூதவுடல் எதிர்வரும் திங்கட்கிழமை அவரது பிறந்த இடமான டெக்ஸாஸிலுள்ள டெனிசன் நகரில் ராஜமரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும். அதுவரை பொதுமக்களின் இறுதிமரியாதைக்காக ஐஸனோவரின் பூதவுடல் ராஜமரியாதைகளுடன் வைக்கப்பட்டிருக்கும்.

### நிக்ஸன் ஏற்பாடு

திங்களன்று தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கும்படிஅதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிறார். முப்பதுநாட்களுக்கு தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டுமென்று அவர் உத்தரவு போட்டிருக்கிறார்.

தனித்துவமிக்க மிகப் பெரிய தேசிய வீரர் என்று ஐஸனோவரை அதிபர் நிக்ஸன் நினைவுகூர்ந்தார்.

### யுத்தகால சேனாதிபதி

இரண்டாவது உலக யுத்தத்தின்போது நேசநாடுகளின் படைகளுக்கு தலைமை தாங்கி வெற்றிக்கு வழிகோலியவர் ஐஸனோவர். ஜெர்மனியின்மீது நேசநாடுகள் போர்தொடுத்தபோது சுப்ரீம் கொமாண்டராகவிருந்தார். இவர்தலைமையின்கீழ் நேசநாடுகளின் படை நடத்திய உக்கிரமான போரின் காரணமாக ஜெர்மனிசரணடைந்தது.

### அமெரிக்க தளபதி

உலகயுத்தம் முடிவடைந்த பின்னர் ராணுவத்திலிருந்து ஒய்வுபெற்றஐஸனோவர் தாயகம் திரும்பி அமெரிக்காவின் ராணுவத்தளபதியாகப் பதவியேற்றார். 1941-ம் ஆண்டுவரையில் இப்பதவியிலிருந்த பின்னர் 1952-ல் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் 1956ம் ஆண்டில் மீண்டுமொரு முறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். குடியரசுக்கட்சியின் சார்பில் இரண்டுதடவைகள் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் இவர் ஒருவரே.

## பள்ளிக்கூட வாழ்க்கையிலேயே 'ஐக்' ஒரு தலைவர்

இவ்வுலகில் சிலர் ஆளப் பிறந்தவர்கள் எத்துறையிலும் அவர்கள். தலைமைப் பதவியிலேயே இருப்பார்கள் ஜெனரல் ஐஸனோவரும், இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர். இராணுவ சேவையில் அவர் இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது நேச தேசப்படைகளில் பிரதம சேனாதிபதியாகவிளங்கினார். இராணுவத்திலிருந்துஇளைப்பாறி சாதாரண வாழ்க்கையில் அமெரிக்க ஜனாதிபதியாக - தேசத்தலைவராக விளங்கினார்.

1891-ம்ஆண்டு டெக்சாஸ் மாகாணத்திலுள்ள டெனிசன் என்னுமிடத்தில் பிறந்து வளர்ந்த ஐஸனோவர் பள்ளிக்கூட வாழ்க்கையிலேயே தான் ஒரு தலைவன் என்பதை நிரூபித்துவிட்டார். படிப்பிலும் விளையாட்டுகளிலும் முன்னணியில் விளங்கினார். அவருக்கு ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். எல்லோருக்கும் 'ஐக்' என்ற செல்லப்பட்டம் சூட்டப்பட்டது. அவர் ஜனாதிபதிபதவிக்கு போட்டியிட்டபோது 'ஐ லைக் ஐக்' என்ற சுலோகம் அமெரிக்கா முழுவதும் முழங்கியது.

இராணுவ கலாசாலையில் பயின்றபோது, ஒருதடவை உதைபந்து ஆடும்போதும் இன்னொரு முறை குதிரைச் சவாரி செய்யும்போதும் கீழே விழுந்து காலை முறித்துக் கொண்டார். பின்பு கொல்ப் விளையாட்டிலும் தீரராக விளங்கினார். 46வது வயதில் விமானம்செலுத்தக் கற்று விமானி லைசென்ஸும் பெற்றுக் கொண்டார்.

1915-ம் ஆண்டு இராணுவ கலாசாலையில் தேறியதும் 19-வது காலாட்படையில் சேர்ந்து டாங்கி பயிற்சி நிலைய அதிபராக பதவி ஏற்றார். அங்கே 28வது வயதில் 6000 வீரருக்கு அதிபதியான லெப்டினன்ட்கேணல்ஆனார். 1918-ல் முதலாது லக யுத்தம் முடிந்ததும் அவருடைய 'நிர்வாகத் திறமை, ஆர்வம், தீர்க்க தரிசனம்' ஆகியவற்றிற்காக சிறப்பு இராணுவ விருது அவருக்கு வழங்கப்பட்டது.

பல இடங்களில் இராணுவ சேவை செய்த பின்பு ஜேர்மனியை தோற்கடிக்கும் நோக்கத்துடன் சௌஜன்ய சுபாவத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்று பெரும் முயற்சிகளை எடுத்துககொண்டார்.

யுத்தம் முடிந்து வெற்றிவாகையுடன் அவர் அமெரிக்கா திரும்பியபோது அவருடைய புகழும் மதிப்பும் உச்சத்தை எட்டிவிட்டது. 1952-ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி போட்டியில் வெற்றிபெற்று 1953-ம் ஆண்டு ஜனவரி 20-ந் திகதி ஹாரி ட்ருமனுக்குப்பின் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றார். அப்பொழுது அவருக்கு உபஜனாதிபதியாய் இருந்த றிச்சேட் நிக்ஸனே இன்று அமெரிக்க ஜனாதிபதி.

நேர்மை, விடாமுயற்சி, இன்முகம் காட்டும் எளிய சுபாவம், வெட்டொன்று துண்டிரண்டு என்று காரியங்களை சாதித்தல், எல்லைகடந்த தேசாபிமானம் முதலிய குணங்களே ஐஸனோவரை இராணுவ வாழ்க்கையிலு சாதாரண வாழ்க்கையிலும் தலைவனாக்கின.

—வி. என். பி.



## வெளி நோயாளர் சிகிச்சை நிலையம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதி திருத்தி அமைக்கப்பட்டுவருகிறது. இதற்காக இரண்டரை இலட்சம் ரூபாவை சுகாதாரப்பகுதி ஒதுக்கியுள்ளது.

இங்கு இடநெருக்கடி நிலவி வருவதாக வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இந்த நிதி வழங்கப்பட்டது. 3 மாத காலத்தில் கட்டிடம் முடிவடையும்.

## டி எஸ். சின் இல்லத்தை தேசியசின்னமாக்கவேண்டும்

### அக்குறனை எம். பி. கோரிக்கை

கோட்டை, வியாழன்

'இலங்கையில் முதல் பிரதமரான திரு. டி. எஸ். சேனநாயக்காவின் வாசஸ்தலத்தை தேசிய சின்னமாக அரசாங்கம் வைத்திருக்க வேண்டும் என அக்குறனை எம். பி. ஜனாப். ஏ. சி. ஹமீட் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஆசியாவிலும் மேற்குநாடுகள் சிலவற்றிலும் அரசியல் தலைவர்களின் இல்லங்கள் தேசிய சின்னங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன என்றும் உதாரணமாக இந்தியாவில், இந்தியாவின் முதல்ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திரபிரசாத்தினதும், பிரதமரான திரு. ஜவஹர்லால் நேருவினதும் இல்லங்கள் தேசிய சின்னங்களாக அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## 'சர்வாதிகார ஆட்சி நடத்த அரசாங்கம் முயல்கிறது'

### மைத்திரி குற்றச்சாட்டு

வத்தளை, சனி

''பிரதம மந்திரியும் அவரைச் சார்ந்தவர்களும் மக்களை அடக்கி ஆளுவதோடு சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும் எத்தனிக்கின்றனர். திருமதி பண்டாரநாயக்காவை கொலை செய்யச் செய்த சதியை அரசாங்கமும் அதைச் சேர்ந்தவர்களும் சிரிப்புக்கிடமானதாகக் கருதுகின்றனர். ஆனால் அது அப்படியல்ல. அது பொதுமக்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு செய்த சதியேயாகும்'

அரசாங்கத்தின் உணவுற்பத்திப் பெருக்கத்தைப் பற்றி திரு மைத்திரிபால குறிப்பிடுகையில் எதிர்க்கட்சியினர் இதை எதிர்க்கவில்லை யெனவும் உணவுற்பத்தி வாஞெலி பத்திரிகையளவில் இருக்கக்கூடாது எனவும் சுதந்திரக் கட்சி அதிகாரத்திலிருந்த காலத்தில் 5 கோடி தொன் நெல் சாகுபடி செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

ஆலயம்

ஆலயப்பிரவேசம் பற்றிய

## 'நோட்டீஸ்'டன் வந்தவர் வாலிபர்களால் தாக்கப்பட்டாராம்

### நல்லூரில் நடந்த சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆலயப்பிரவேசம் சம்பந்தமான ''நோட்டீஸ்'' களுடன் பஸ்ஸில் ஏற வந்த ஒருவர் வாலிபர்களால் நையப்புடைக்கப்பட்டாராம். இச்சம்பவம் நல்லூர் முத்திரைச் சந்தையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் ஆலயப்பிரவேசம் நடைபெற்றதாக வெளிவந்த செய்திகளில் உண்மை எதுவுமில்லையென்றும், அப்படி ஒரு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை யென்றும் மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நோட்டீஸ்களுடன் வந்த நீர்வேலியைச் சேர்ந்த சி. முகலித்தம்பி என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

அவர் வைத்திருந்த நோட்டீஸ் பறிக்கப்பட்டதோடு, ஷேர்ட்டுக்குள்ளிருந்த பணத்தையும் வாலிபர்கள் பறித்துச் சென்றுவிட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்பொலிஸார் சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாகச் சென்றபோதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. இது சம்பந்தமாக சுமார் 15க்கும் மேற்பட்ட வாலிபர் கோஷ்டியொன்றை பொலிஸார் தேடிவருகின்றனர்.

[கா. நி]

## கண்டிமாநகரசபை இடைத் தேர்தலில் மூவர் போட்டி

கண்டி, சனி

கண்டி மாநரசபையின் 15-ம் வட்டார மல்வத்தை தொகுதி இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் கண்டி கச்சேரியில் உதவி தேர்தல் கமிஷனர் ஏற்றுக்கொண்டார். கடந்த மாதம் 25-ம் திகதி அங்கத்தவரான ஹென்றி விஜயரட்ணவின் ராஜினமா ஏற்றுக்கொள்ளப் பட்டதால் இவ் இடைத்தேர்தல் நடை...

கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது சிறிலங்கா சுதந்திர கட்சி அங்கத்தவப் பதவியிலிருந்து ராஜினமா செய்து ஐக்கிய தேசிய கட்சியினருடன் மேயருக்கு சாதகமாக வாக்களித்தார். திரு விஜயவர்த்தனவின் ராஜினமாவின் பின் 23 அங்கத்தவர்களைக்கொண்ட கண்டி மாநகரசபையின் கட்சி நிலை வருமாறு ஐ. தே. க. 10 ஸ்ரீலங்காசுதந்திரகட்சி 11 ...

## மேற்காசிய அமைதிக்கு நான்கு வல்லரசு சந்திப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேற்காஸிய அமைதிக்கு

# நான்கு வல்லரசு சந்திப்பு விரைவில் நடக்கும் அறிகுறி

வாஷிங்டன், மார்ச் 29

மேற்கு ஆசிய நெருக்கடிக்கு ஒரு முடிவுகாணும் விதத்தில் நான்கு வல்லரசுகள் கூடிப் பேசக்கூடிய வாய்ப்பு மிக நெருக்கமாக வந்துள்ளதாக அமெரிக்கா கருதுகின்றது.

அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நான்கு வல்லரசுகளின் தூதர்கள் முதலில் சந்தித்துப் பேசுவார்கள் என்று தெரிகின்றது. இந்தப் பேச்சுவார்த்தைகள் நியூயோர்க்கில் இடம் பெறும். ஆனால் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மேற்கு ஆசிய நெருக்கடி குறித்து நான்கு வல்லரசுகள் கூடிப் பேசி முடிவுகள் எடுப்பதை இஸ்ரேல் விரும்பவில்லையென்று தெரிகின்றது. இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காகவே இஸ்ரேல் சமீப காலமாக அரபுநாடுகள்மீது பெரிய தாக்குதல்களை நடத்திவருவதாக அரபு நாடுகள் கருதுகின்றன. ஜோர்டான்மீது இஸ்ரேல் கடைசியாக நடத்திய தாக்குதலை அமெரிக்கா மட்டுமின்றி பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளும் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் கண்டித்திருக்கின்றன.

## மீண்டு வேலையில் சேர்க்கப்பட்டார்

அளவெட்டி, சனி

சிங்களக் கெடுபிடி காரணமாக வேலைநீக்கஞ்செய்யப்பட்ட மூன்றாவது நபர் வேலைக்குத் திருப்பி எடுக்கப்பட்டார்.

காங்கேசன்துறை வாசியும், தற்சமயம் கொழும்பு கப்பல் அணைப்பகுதி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருமான திரு. நடராசா, சிங்களத் தேர்ச்சியின்மையால் வேலைநீக்கஞ் செஒயப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவர் எடுத்த பல முயற்சிகளின் பின்பு மீண்டும் இவருக்கு வேலையளிக்கப்பட்டது.

சிங்கள நிபந்தனை காரணமாக அரசாங்கத்தால் வேலைநீக்கஞ் செய்யப்பட்ட நபர்களில் இவர் மூன்றாவது நபராவார்.

தாம் வேலைநீக்கஞ்செய்யப்பட்டதை ஆட்சேபித்து இவர் திணைக்களத்துக்கு எழுதியுள்ளகடிதத்தில் தாம் தமது சேவைக் காலத்தில் சிங்களம் படிக்கமுடியாத இடத்தில் கடமையாற்றியதாலேயே சிங்களம் படிக்கவில்லை என்ற காரணம் காட்டியிருந்தார்.

## பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு பேராசிரியர்கள்

கொழும்பு, சனி

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குவெளிநாட்டிலிருந்து பேராசிரியர்களை வரவழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் இரசாயனவியல், பௌதிகவியல் கணிதம் ஆகியவற்ைற கற்பிக்க பேராசிரியர்கள் பற்றாமல் இருப்பதினாலேயே வெளிநாட்டிலிருந்துபேராசிரியர்களை அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்தவருடத்தில் முதலாம் தரத்தில் நாலுபேர் சித்தியடைந்ததாகவும் அவர்கள் வேறுபதவிகளுக்குப் போனதாலேயே இவ்வித நிலைமைஇங்குஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் பரீட்சைகளுக்கான நடவடிக்கைகளில்சபைத்தேர்வு காரியதரிசி ஈடுபட்டுள்ளார். பரீட்சைக்கான பாடத்திட்டங்கள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படுகின்றன.

## வருமானத்தில் கூடிய அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 29

இந்திய உல்லாசப் பிரயாணிகள் அமைச்சர் திரு. ஹரன்சிங் அமைச்சர்களுள் கூடிய வருமானமுடையவராக இருக்கிறார். பாரத அமைச்சர்கள் சமர்ப்பித்த வருமானப்பட்டியலிலிருந்து இது தெரியவந்தது.

பாரத துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பாரத அமைச்சர்களின் வருமானத்தை வெளிப்படுத்துமாறு லோகசபையில் கோரியிருந்ததைத் தொடர்ந்தே இவை சமர்ப்பிக்கப்பட்டது.

## இந்த நீரில் பெண்களுக்கு மோகம்

புவனேஸ்வரம், மார்ச் 29

அசோகாஷ்டமி தினத்தை முன்னிட்டு பிள்ளைப் பேறு கோரும் பெண்மணிகள் பழைய புவனேச்வரத்திலுள்ள ''மரீசிகுண்டம்'' என்ற கிணற்றைச் சூழ்ந்து கொண்டனர். இந்நன்னாளில் இக்கிணற்றிலிருந்து எடுக்கப்படும் முதல் பானை தண்ணீரை அருந்தினால் பலட்டுப் பெண்ணும் கருத்தரிப்பாள் என்றொரு ஐதிகம். இன்றுமுதல் குடம் தண்ணீர் ஏலத்தில் விடப்பட்டது. ரூ. 3000 ஏலப் பணம் கிடைத்தது. குழந்தையில்லாத பெண்கள் தங்கள் ஆசை நிறைவேறுமென்ற ஆவலில் விடியற்காலையிலிருந்தே இங்கு காத்திருந்தனர்.

## வித்துவான் பரீட்சை எழுதும் ஆயுட் கைதி

திருச்சி, மார்ச் 29

இங்குள்ள மத்திய சிறையிலிருக்கும் ஆயுட் கைதிகளில் ஒருவர் இவ்வாண்டு எஸ். எஸ். எல். ஸி பரீட்சை எழுதப் போகிறார்கள்.

மற்றும் மூன்று கைதிகள் தமிழில் ''வித்வான்'' பரீட்சை எழுதப் போகிறார்கள்.

1918-ல் முதலாவது உலக யுத்தம் முடிந்ததும் அவருடைய 'நிர்வாகத் திறமை, ஆர்வம், தீர்க்க தரிசனம்' ஆகியவற்றிற்காக சிறப்பு இராணுவ விருது அவருக்கு வழங்கப்பட்டது.

பல இடங்களில் இராணுவ சேவை செய்த பின்பு 1933-ம் வருடமளவில் வாஷிங்டனில் ஜெனரல் டக்ளஸ் மக்காதரின் பிரதம உதவியாளராக நியமிக்கப்பட்டார். இங்கு இராணுவத்தில் விமான பலத்தை எவ்வாறு வெற்றியுடன் பயன்படுத்தலாமென்று பல புதிய முறைகளை பரிசீலனை செய்தார். இவற்றின் பயனாகவே ஜப்பான் அமெரிக்காவை தாக்கிய போது பிலிப்பைன் தீவுகளில் மக்காதரின் கையாளாக இருந்து விமானப்படை பலத்தை அபிவிருத்தி செய்தார்.

1941-ம் ஆண்டு ஐஷனோவர் வாஷிங்டனுக்குஅழைக்கப்பட்டு யுத்த திட்டசபையின் தலைவராக்கப்பட்டார். இச்சமயத்தில் அமெரிக்க படைகள் ஐரோப்பாவில் ஜேர்மனியை எதிர்த்தும் தூரகிழக்கில் ஜப்பானியரை எதிர்த்தும் போராடிக் கொண்டிருந்தன. இரு அரங்கங்களிலும் அமெரிக்க படைகளின் யுத்த தந்திரங்களை நிர்ணயிக்கவேண்டியது அவரது பொறுப்பாகிற்று. ஆறுமாதம் கழித்து ஐரோப்பாவிலுள்ள எல்லா அமெரிக்க படைகளுக்கும் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அமெரிக்க வீரர்கள், ஹிட்லர் பிடித்து வைத்திருந்த நோர்வே முதலிய வடஐரோப்பிய நாடுகளில் இறங்காமல் வட ஆபிரிக்காவில் இறங்கி ஜேர்மன் சைன்யங்களை இத்தாலிக்கூடாக விரட்டிச்செல்ல வேண்டுமென்ற தந்திரத்தை வகுத்தவர் ஜெனரல் ஐஸனோவரே.

நேசதேசப் படைகளின் பிரதம சேனாதிபதியாக பதவியேற்று லண்டனில் தமது தலைமைக் காரியாலயத்தை அமைத்துக்கொண்டதும் அமெரிக்க வீரரும்பிரிட்டிஷ்வீரரும்ஏற்றம் தாழ்வு பாராட்டாமல்

## பூகம்பத்தில் 50பேர்பலி

இஸ்தான்புல், மார்ச் 29

துருக்கியில் நேற்று ஏற்பட்ட பூகம்பத்தில் குறைந்தது 50 பேர் வரையில் பலியாகியிருப்பதாகவும் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

செய்த சதியை அரசாங்கமும் அதைச் சேர்ந்தவர்களும் சிரிப்புக்கிடமானதாகக் கருதுகின்றனர். ஆனால் அது அப்படியல்ல. அது பொதுமக்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு செய்த சதியேயாகும்'

இவ்வாறு சுதந்திரக்கட்சியின் உபதலைவரும், மதவாச்சி ஆட்சிமன்ற அங்கத்தவருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா யாளவில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி பிரசாரக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சென்ற தேர்தலில் நாங்கள் தோல்வியடைந்தமைக்குக் காரணம் திட்டமிட்டு சரியாகநிறுவாமையேயாகும் முறை சரியாக நிர்வகித்து செயலாற்றப்படுவதால் இந்தத்தடவை தேர்தலில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். ஆகக் குறைந்தது 75 ஸ்தானங்களைப் பெற்று சுதந்திரக்கட்சி அதிகாரத்துக்கு வரும் எங்களுக்கு மறைமுகமாக சில ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் ஆதரவளிக்கிறார்கள்.

## பா. தளபதியும் பாரத தளபதியும்

புதுடில்லி, மார்ச் 29

பாகிஸ்தானின் தற்போதைய சர்வாதிகாரியான தளபதி யாகியா கானும், இந்திய முப்படைத் தளபதியான குமாரமங்கலமும் 2-வது யுத்தகாலத்தில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள். எதிரிகளிடம் பிடிபட்டுத் தப்பி ஓடியவர்கள் இத்தாலியில் ஒரு யுத்தமுகாமல் ஒரே சிறையில் இருந்தவர்கள்.

இந்தச்சுவையான தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

## மௌலானா பாசனி தலைமறைவு

கராச்சி, மார்ச் 29

பாகிஸ்தானில் பீகிங் சார்புக் கட்சியான அவாமிக் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டு, அதன் தலைவர் மௌலானா பாஷானியின் நடமாட்டத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. மௌலானா பாஷானி எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. அவர் தலைமறைவாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இராணுவ ஆட்சியின் கீழ் இயங்கும் பாகிஸ்தானில் பத்திரிகைச் செய்தி தணிக்கைசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

எனவும் சுதந்திரக் கட்சி அதிகாரத்திலிருந்த காலத்தில் 5 கோடி தொன் நெல் சாகுபடி செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

## ஆலயம் அமைக்கப்படும்

அளவெட்டி, சனி

முத்தையன்கட்டு வலதுகரை படித்த வாலிபர்களுக்கும், விவசாயிகளுக்குமாக அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முத்தையன் கட்டுக்குளத்துக்கருகாமையில் ஒரு பிள்ளையார் கோவில் அமைக்கப்படவிருக்கிறது.

இக்கோவிலுக்கான அத்திபாரக்கல் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தாவினால் ஏப்ரல் 2-ம் திகதி காலை நாட்டப்படவிருக்கிறது.

இக்கோவிலுக்கான விநாயகர்விக்கிரகத்தை டொலர் கோப்பரேஷன் மனேஜர் திரு. ஏ. சம்பந்தர் வழங்க முன்வந்துள்ளார்.

கோவில் கட்டுவதற்கான சகல வேலைகளையும் ஒட்டிசுட்டான் நீர்ப்பாசன பொறியியலாளர்கள் கவனிப்பர்.

## ஆங்கில தினம் கொண்டாடினர்

சங்கானை, சனி

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் ஆங்கில தினம் கொண்டாடப்பட்டது திரு. பொ. கணேசன் தலைமைவகித்தார். கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி அகில இலங்கையிலும் நடைபெறவிருக்கும் ஆங்கிலப் போட்டிகளுக்கு முதற்படியாக இவ் விழா கொண்டாடப்பட்டது. ஆங்கில உரையாடல்கள், எழுத்துப் போட்டிகள், கவிதை இசைத்தல் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதிபர் மு. சிவானந்தம் அனைவருக்கும் நன்றிதெரிவித்துப் பேசுகையில், ஆங்கிலத்தை படிக்கவேண்டிய முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தினார்.

## ஓய்வுபெற்றார்

சங்கானை, சனி

கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. கி. பரராசசிங்கம் தமது 60வது வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு ஆசிரிய மாணவர்களால் பிரிவுபசார விழாவொன்று நடாத்தப்பட்டது. இவர் 32 வருடம் சேவையாற்றியுள்ளார்.

கள் கண்டி கச்சேரியில் உதவி தேர்தல் கமிஷனர் ஏற்றுக்கொண்டார். கடந்த மாதம் 25-ம் திகதி அங்கத்தவரான ஹென்றி விஜயரட்னவின் ராஜினமா ஏற்றுக்கொள்ளப்பட்டதால் இவ் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது.

இவ் இடைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் திரு. சீ மாவுல் பத்தையும், சிறிலங்காசுதந்திரக்கட்சியின் சார்பில் திரு. எச். டி. பி. பெர்னன்டோவும், சுயேச்சையாக திரு. கஹென்றி விஜயவர்தனவும் போட்டியிடுகின்றனர். தேர்தல் நடைபெறும் திகதி இன்னும் ஒரு வாரத்தில் அறிவிக்கப்படும்.

சுயேச்சையாக போட்டியிடும் திரு. ஹென்றி விஜயவர்த்தன கடந்த மாதம் மல்வத்தை தொகுதி அங்கத்தவர் பதவியிலிருந்து ராஜினமா செய்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவரான கண்டி மாநகரசபைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட திரு விஜயவர்தன அண்மையில் கண்டி மேயர் சா. பெணட் சொய்சாமீது

## நயினாதீவு கி. ச. கூட்டத்தில் 'சியவச'

நயினாதீவிலுள்ள பாடசாலையொன்றில் 'சியவச' சுவிப் டிக்கட் வாங்க மறுத்த மாணவர்கள் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்களாம். இதுபற்றி உடன் விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்ட ஆசிரியர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருவதற்கான பிரேரணை முன்னறிவித்தல் ஒன்றை நயினாதீவு கிராமசபை 5ஏ வட்டார அங்கத்தவர் அ. நல்லையா கொடுத்துள்ளார்.

பாடசாலையில் 'சியவச' சுவீப் டிக்கட் விற்பதைத் தடைசெய்யவேண்டும் என்றும், விரும்பினால் பெற்றோர் ஆசிரியர் சங்கமூலம் விற்பனை செய்யலாம் என்றும் அவர் தமது பிரேரணையில் தெரிவித்துள்ளார்.

## மிருக வைத்தியர் இல்லை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவில் மிருக வைத்தியர் இல்லாமலிருப்பதால் இப்பகுதி மக்கள் கஷ்டமுறுகிறார்கள். கரைதுறை வவனியா வடக்கு ஆகிய காரியாதிகாரி பிரிவில் கடமையாற்றிய மிருகவைத்தியர் காலமானதைத்தொடர்ந்து இப்பதவி காலியாகவுள்ளது.

இதுபற்றி வவனியா எம். பி. யிடம் முறையிடப்பட்டுள்ளது

கிய தேசிய கட்சியினருடன் மேயருக்கு சாதகமாக வாக்களித்தார். திரு விஜயவர்த்தனவின் ராஜினமாவின் பின் 23 அங்கத்தவர்களைக்கொண்ட கண்டி மாநகரசபையின் கட்சி நிலை வருமாறு ஐ. தே. க. 10 ஸ்ரீலங்காசுதந்திரகட்சி 11 சுயேச்சை 1.

## இந்திய சேலைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஞாயிறு

கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட நபர் ஒருவர் சங்கானைப் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டார்.

சங்கானைப் பொலிசைச் சேர்ந்த திலகரத்ன, பியசேன ஆகிய இருவரும் இரவு கடமையில் ஈடுபட்டிருக்கும்போது அதிகாலை 4-30 மணியளவில் சயிக்கிளில்சென்றுகொண்டிருந்த சங்கானையைச் சேர்ந்த இராமசாமி குலசிங்கம் என்பவரை சந்தேகத்தின்மீது சோதனைசெய்து பார்த்தபோது அவருடைய சூட்கேசில் விலைஉயர்ந்த 20 இந்திய சேலைகளும் 4 சாரங்களும் இருக்கக் காணப்பட்டன. இவைகளை கொழும்பிற்கு புகையிரதமூலம் கடத்திச்செல்ல எத்தனித்ததாக விசாரணையிலிருந்து தெரியவந்தது.

பிடிபட்ட சேலைகளும், சாரங்களும் யாழ்ப்பாணம் சுங்க இலாகா பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. (ச. நி)

## ரேடியோவில் தீண்டாமைஒழிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக பலவித நிகழ்ச்சிகளையும், சொற்பொழிவுகளையும் நிகழ்த்தவேண்டிய அவசியத்தைபருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், சிறுபான்மைத் தமிழர் கல்வி அபிவிருத்திச் சபைசெயலாளர் திரு. க. நடராசா ஆகியோர் ஒலிபரப்பு மாஅதிகாரி திரு. நெவில் ஜெயவீராவுடன் பேசியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து இந் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப விருப்பதாக ஒலிபரப்பு மா அதிகாரி அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எது தர்மம் என்று முடிவு கட்டுவதற்கு உரைகல் ஒன்றே. லாபத்தை விரும்பாமல் செய்யப்பட்ட செயலா என்பதே அது. அதுதான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்டுப்படுத்தும் நிபந்தனை.

— மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கிலக வருஷம் மாசிமாதம் 17-ந்திகதி
(30 - 3 69)


## வகுப்புவாத பிரசாரத்துக்குத் தடை

திராவிட முன்னேற்றக்கழகம் என்று பூச்சாண்டி காட்டி நாட்டில் இனவெறியைத் தூண்டும் வகையில் மேடைகளில் பேசுவோரின் பேச்சுக்களை ஒலிப்பதிவுசெய்யும்படி பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தவிதமான வகுப்புத் துவேஷப் பிரசாரத்தில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால், காலங்கடந்த முயற்சியானாலும் வரவேற்கவேண்டிய தொன்றாகும்.

தேர்தல் காலம் நெருங்கியதும் வகுப்புவாதக் கூச்சல் அதிகரிப்பது இங்கு சாதாரண விஷயம். தேர்தல் காலம் நெருங்காத போதிலும் அரசியல் இலாபத்தை அடிப்படையாகக்கொண்டு வகுப்புத் துவேஷயத்தைக் [illegible]கக்குபவர்களையும் மற்றவர்களின் கவனத்தைச் சுலபமாக ஈர்த்துப் பெரிய புள்ளிகளாவதற்கும் வகுப்புத் துவேஷத்தை சிலர் இங்கு கிளப்புவதும் சகஜம். அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டவர்களும் அரசியல் ஆதாயத்தை நோக்கமாகக்கொண்ட அரசியல் வாதிகள் மட்டுமல்லாது சில பொறுப்புள்ள 'தேசிய' பத்திரிகைகளும் கூட நாட்டின் அமைதியைக் குலைத்து தேசிய ஐக்கியத்தையும் நாட்டின் முன்னேற்றத்தையும் சீர்குலைக்கக்கூடிய முறையில் செய்திகளை வெளியிட்டும் கருத்துக்களைத் தெரிவித்தும் எழுதிவருகின்றன. மேடைப் பேச்சுக்களை விட மிக ஆபத்தானவை பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் எழுதப்படும் விஷமத்தனமான பிரசாரம். 1958-ம் ஆண்டுக்கு முன்னர் இன வெறியைத் தூண்டும் பிரசாரங்களும் நடைபெற்றுவந்தன. இந்தப் பிரசாரங்களின் விளைவுகள் ஆபத்தானவையாக இருக்குமென்பதை ஆட்சி மன்றத்தில் சிலர் எடுத்துக் காட்டியபோதும் அப்போதிருந்த அரசாங்கம் அலட்சியமாக நடந்துகொண்டது. அதன் விளைவை 1958-ம் ஆண்டு நாடு அனுபவித்தது. அந்தத் துயர அனுபவத்தை இவ்வளவு விரைவாகப் பொறுப்புள்ள சில தலைவர்களும் பத்திரிகைகளும் மறந்துவிட்டதுதான் வேதனைக்குரியது. மக்கள் மத்தியில் அன்பையே போதிக்கவேண்டிய மதத் தலைவர்கள் சிலர் கூட துவேஷத்தையும் பகைமையையும் போதிக்கிறார்களே என்று பிரதமர் வேதனையோடு நேற்றுமுன் தினம் ஒரு வைபவத்தில் பேசியிருந்தார்.

இனவெறியைத் தூண்டக்கூடிய முறையில் மேடைகளில் பேசுவோர்கள்மீது மட்டுமல்லாது இனவெறியைக் கிளப்பிவிடக்கூடிய முறையில் எழுதும் பத்திரிகைகள் மீதும் இப்போதுள்ள சட்டவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க முன்வரலாம். தமிழ்நாட்டில் கட்சிப் பத்திரிகைகள் கண்டபடி, கண்ணியமற்ற முறையில் ஒருவர் மீது ஒருவர் வசைபாடிக்கொண்டிருப்பதைத் தடுப்பது பற்றி ஆலோசித்து ஒரு முடிவு காணத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியத்தை அழைத்திருக்கிறார், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி. இது நல்ல முயற்சியும் முன்மாதிரியான செய்கையுமாகும். இங்கும் கட்சித்தலைவர்களைப் பிரதமர் அழைத்துப் பேசுவதுடன் தேசியபத்திரிகைகளின்ஆசிரியர்களையும் மாதம் ஒரு தடவையாவது பிரதமர் சந்தித்துப் பேசி, பத்திரிகைகள் தங் [illegible]

# திருக்கோணேஸ்வரம் பிரமதேவனால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்தலம்

## புராணவரலாறு பற்றிய ஒரு கருத்து

"திருக்கோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரர்ஆலயம் குளக்கோட்ட மகாராஜா காலத்துக்கும் முந்தியது. வழிவழியாக இந்துக்களின் பூஜைக்குரிய இந்தஸ்தலம் ஆதியில் சிவ பெருமானின் கட்டளையின் பேரில் சாட்சாத் பிரம்ம தேவரினாலேயே நிர்மாணிக்கப்பட்டது என்று சூதமுனிவரினால் ஆக்கப்பெற்ற தட்சன கைலாச புராணம் கூறுகின்றது".

அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்ப்பாணக் கிளையின் செயலாளர் நியாயதுரந்தரர் திரு எஸ். பொன்னையா மேற்கண்ட கருத்தை இக் கட்டுரையில் வெளியிடுகிறார் திருக்கோணமலையை புதுப்பித்து அமைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் நியமித்துள்ள கமிஷன் விசாரணைகளில் ஈடுபட்டிருக்கும் இந்த வேளையில் திரு. பொன்னையாவின் இந்தக் கருத்துக்கள் ஆழ்ந்த பரிசீலனைக்குரியவை.

சிங்கள தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் திருக்கோணமலையை பலகோணங்களிலிருந்து பார்த்த போதிலும் அதன் சரித்திரம் எப்பொழுதும் ஒன்றேதான். அங்குள்ள சிவன் கோயிலை குளக்கோட்டு மஹாராஜன் என்ற சோழமன்னன் கி. மு. 4500-ம் ஆண்டில் கட்டினான் என்று சிலர் எழுதியுள்ளார்கள். ஆனால் அதன் சரித்திரம் அதற்கும் அப்பாற்பட்டது. சூதமுனிவரின் தட்சண கைலாச புராணத்தின்படி இக்கோயிலை சிவபெருமானின் கட்டளைக்கிணங்க பிரமதேவனே கட்டினார். மஹாபாரதம், பிரமசூத்திரம் முதலியவற்றின் ஆசிரியராகிய புகழ்பெற்ற வியாசமுனிவரின் மூன்று சீடர்களில் சூதமுனியும் ஒருவர். மனித கர்மானுஷ்டானங்களை விளக்கிய சைமினி என்பவரும் இதிகாசங்களை எழுதிய வைசம்பாயருமே மற்றஇருவர். சூதமுனி புராணங்களின் தத்துவத்தை இருடிகளுக்கு விளக்கினார். பதினெண் புராணங்கள் மறைந்து போகாது பரம்பரை பரம்பரையாக காப்பாற்றப்பட்டு வந்ததற்கு அவரே காரணம். இவர் போன்றவர்கள் திரிகாலமும் உணர்ந்தவர்கள்.

### திருக்கோணாசலம்

வடக்கே கைலாயத்தில் வீற்றிருந்த சிவபெருமான் தெற்கேவசிப்பவர்களை தாம் மறக்கவில்லையென்று காண்பித்து அவர்களையும் பக்தி மார்க்கத்தில் கொண்டுநடத்த விரும்பினார் என்று சூத [illegible]

வடிவமான இச்சிகரத்தில் தான் முதலில் பிரமதேவன் கோயில்கட்டியது. இது திருக்கோணாசலம் என்றழைக்கப்பட்டு பின்னர் திருக்கோணமலை ஆயிற்று இதை தட்சண கைலாயம் என்றும் கூறுவார்கள். தட்சண கைலாய புராணம் என்ற பழைய நூலில் இவ்வளவும் கூறப்பட்டுள்ளது.

### அழிவற்ற ஸ்தலம்

முக்கோண வடிவான இந்த ஸ்தலம் என்றும் அழியாதது என்று சூதமுனிவர் கூறுகிறார். இக்கூற்று மிகவும் உண்மையானது. எத்தனையோ புரட்சிகளும் மாறுதல்களும், சில சிங்கள மன்னர்களாலும் போத்துக்கீசராலும் சேதங்களும் ஏற்பட்ட

—எஸ். பொன்னையா—

போதிலும் மலையும் கோயிலும் அழியாமல் இருந்து வருகின்றன. பிரமதேவன் இக்கோயிலைக்கட்டி பலயுகங்களுக்குப் பின் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் 'குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே' என்று திருப்பதிகம் பாடியுள்ளார்.

இத்தீவில் 'நினைவுக் கெட்டாத காலம் தொட்டு இந்துக்கள் வாழ்ந்தனர்' என்று சேர் வில்லியம் ஜோன்ஸ 1831-ம் ஆண்டு நவம்பர் 21ல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார்.

### குளக்கோட்டன் [illegible]

அதன் இந்தத் தொடர்பைக் குறிக்கிறது. சரித்திர காலத்துக்கு முன்பு வாழ்ந்த இராவணனின் தாயார் அரிசி மாவினால் லிங்கம்உருவாக்கி சிவனை வழிபடுவள். அவள் நோயிற்றிருந்த போது சிவ பக்தனான இராவணன் கைலாயத்திலிருந்து ஒரு லிங்கம் கொண்டுவரச் சென்றான். இந்திரன், விஷ்ணு முதலிய தேவர்கள் அவன் அதை இலங்கைக்குக் கொண்டுவராதபடி சூழ்ச்சி செய்தனர். அப்பொழுது விநாயகப் பெருமான் ஒரு பிராமண ரூபத்தில அவன் முன் தோன்றி திருக்கோணமலையில ஒரு லிங்கம் இருக்கிறதென்று சொன்னார். இராவணன் அங்கு சென்று லிங்கத்தைக் கிளப்ப முடியாமல தன் வாளால மலையை வெட்டினான். அச்சமயம் அவனுடைய தாயார் இறந்துவிட்டதாக யாரோ சொன்னார்கள். தாய்க்கடன்களைச் செய்வதற்கு இராவணன் தோண்டிய கன்னியா வெந்நீர் ஊற்றுகளை இன்றும் காணலாம்.

### லிங்க வழிபாடு

மகாசேனன் என்ற மன்னன் பிராமண கோயில்களை அழித்து விகாரை கட்டினான் என்று மகாவம்சம் கூறுகிறது. கிழக்குக்கடலோரத்திலும் இலங்கையின் பிற இடங்களிலுமுள்ள சிவலிங்க வழிபாட்டை ஒழித்து புத்த மதத்தைப் பரப்பினான் என்றும் அதற்கு அடிக்குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பிராமண கோயில்களும் லிங்க வழிபாடும் திருக்கோணமலையையே குறிக்கின்றன.

திருக்கோணமலையில இலங்கை இந்துக்கள் மட்டுமலல இந்தியாவிலிருந்து வருபவர்களும் சிவனை வழிபட்டார்கள் என்று டி கொய்ரோஸ் என்பவர் எழுதுகிறார்.

சூளவம்சத்திலும் சில போத்துக்கேய தஸ்தாவேஜுகளிலும் திருக்கோணமலை இந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமாயிருந்ததென்று பல சான்றுகள் உள்ளன. அவற்றை எலலாம் எடுத்துக்காட்டின் இக்கட்டுரை விரிவடையும்.

சில அறிஞர்கள் தங்கள் இனத்தவர்களை ஏற்றிவைப்பதற்காக சரித்திர வரலாறுகளைத் திரித்துக் கூறுவது வருந்தத்தக்கது.

# 'பலாத்கார சம்பவத்தை சொன்னதும் கணவனுக்கு திகைப்பாக இருந்தது'

## பலாத்கார வழக்கில் பார்வதி சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தோமஸ் என்பவர் மகா வித்தியாலய கட்டடத்தில் வைத்து என்னை பலாத்காரம் செய்தார் அவர் என்னை முள்ளுக்கம்பிவேலியால் இழுத்துக்கொண்டுபோனார். இவ் விஷயத்தை என்கணவருக்குச் சொன்னபோது அவருக்குத் திகைப்பாக இருந் [illegible]

பார்வதி பலாத்காரவழக்கில் எதிரியின் வழக்கறிஞர் [illegible]

என்றீர்?-இல்லை.

வழ: அப்படிச் சொலலவில்லையா?-இலலை.

வழ; தாயாருடன்இருக்கிறீர்?-ஆம்.

நீதி: கீழ்க்கோர்ட்டிலகலியாணம் முடித்து 4 மாதம் விட்டுப்பிரிந்திருந்தார் என்றீரா?-சம்பவம்நடந்தபின்புதான்.

வழ: கீழ்க்கோர்ட்டிலஅப்படிச் சொல்லவில்லையா?-இல்லை.

போனதாக கூறினீர், எது சரி?-கீழ்க்கோர்ட்டில்சொன்னது.

வழ: இங்கு சொன்னது பொய்யா?- சில சம்பவங்களை மறந்துவிட்டேன்.

வழ: தோமஸ், மகாவித்தியாலய கட்டடத்தில் வைத்து பலாத்காரம் செய்தார்?- ஆம்.

வழ: முள்ளுக்கம்பி வேலியால் இழுத்துச் சென்றார்?-ஆம்.

## ஐயாறன் எழுதுவது

தலைமன்னார் கப்பல் துறையிலே சென்ற வியாழனன்று ஒரே கலகலப்பு. பல மாதங்களுக்குப்பிறகு அன்று அதிகாலையில நலல மழை பெய்து பூமி குளிர்ந்தது. தலைமன்னார் தனுஷ்கோடி நீச்சலபோட்டியை முன்னிட்டுத்தான் வருணன் அங்கு மகிழ்ச்சியுடன் வந்தான்போலும்.

இந்திய கடற்படையை சேர்ந்த "கோதாவரி" கப்பல் தூரத்திலே நங்கூரமிட்டது. இந்தியாவிலிருந்து வந்த நீச்சல வீரர்களில சிலர் அதிலும், மற்றவர்கள் "இர்வின்" என்ற பிரயாணிகள் கப்பலிலும் வந்திருந்தார்கள். ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் பாரதி உள்ளிட்டு, சுமார் 70 பேருக்கு மேல் தலைமன்னார் வந்திருந்தார்கள்.

மாலை 5 மணிக்கு வரவேண்டிய கப்பல அன்று இரண்டுமணி தாமதமாகவே வந்தது. இந்திய நீச்சல வீரர்களை வரவேற்க "சர்க்யூட் பங்களா" வில் தங்கியிருந்த இலங்கை நீச்சல வீரர்கள் கப்பல துறைக்கு வந்தனர். "ஆழிக் குமரன்" ஆனந்தன் போட்டியில கலந்துகொள்ளமுடியாதுபோனதைக் கேட்க மிக ஏமாற்றமாக இருந்தது. என்றாலும் இலங்கை வீரர்கள், இவ்வித நீண்டதூர நீச்சலபோட்டியில பயிற்சி இலலாவிடினும் அவர்கள் உற்சாகத்துடன் இதில கலந்துகொள்ள முன்வந்தது பெரிய காரியம். அன்று காலையில நமது வீரர்களில் சிலர் தலைமன்னார் கடலில ஈட்டிமூலம் பெரிய மீன்களைப் பிடித்து, இராணுவத்தினருக்கு விற்று பணம் சம்பாதித்துப் பொழுதைப் போக்கினர்!

சென்றமுறை நீச்சல போட்டி, தலைமன்னார் கப்பல துறையிலிருந்தே நடைபெற்றது. ஆனால் தூரத்தைக் குறைப்பதற்காக தலைமன்னாரிலிருந்து சுமார் 3 மைல மேற்குப் புறமுள்ள ஊர்முனையிலிருந்து இம்முறை புறப்படுவதென்று தீர்மானித்தனராம். விசாரித்ததில, அங்கிருந்து தனுஷ்கோடி நேரேபதினெட்டரை மைல தூரமென்று தெரிய வந்தது.

அதிகாலை 3 மணிக்கு போட்டி ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டது. அன்று இரவு உணவுமிலலை. உறக்கமுமிலலை. அன்றுதான் ராமநவமி. எங்களையும் அறியாமல "விரதம்" கிடந்தோம்! இரவு 3 மணிக்கு ஊர்முனைக்கடலுக்குச் சென்றோம். அங்கு வெளிச்சங்களும், விசேஷ வாத்தியங்கள், வெடிகள் எலலாம் ஏற்பாடுசெய்திருப்பரென்று யாரோ கூறியிருந்தனர். ஆனால் அங்கே ஒரேஇருட்டு. தூரத்தில ஒரு வெளிச்சம் தெரிந்தது, கிட்டச்சென்று பார்த்ததில, அது இலங்கை இராணுவ ஜீப்'பின் விளக்கு வெளிச்சம். அதன் பக்கத்தில இருட்டிலே சில மனித உருவங்கள் தெரிந்தன, இந்திய நீச்சல வீரர்களும் மற்றவர்களும் அங்கு இருட்டில கூடியிருந்தனர்

3 மணிக்கு நீச்சல போட்டி ஆரம்பிப்பதாக இருந்தும் 4 மணிவரை ஓர் ஏற்பாடும் காணவிலலை. இலங்கை வாலிப வீரர்கள் முதல முதலாகக்கலந்து கொள்ளும் இப்பெரிய ஆபத்தான போட்டியிலே அவர்களுக்கு உற்சாகமளிக்க அங்குள்ள எம். பி. யோ, அல்லது அரசாங்கஅதிபரோ காணவிலலை இந்திய வீரர்களுக்கு உற்சாகமூட்ட ராமநாதபுரம் கலக்டரும் வேறு சில பெரிய அதிகாரிகளும் வந்திருந்து படம் பிடித்தனர். இந்தியாவிலிருந்துஅன்று கொண்டுவந்த மாலைகள்தான்இலங்கை வீரர்களுக்கும் போட்டனர். இலங்கையின் சார்பாக நம் வீரர்களுக்கு ஒரு மாலையும் போடவிலலை. ஒரு பட்டாஸ் வெடியும் கொளுத்தப்படவிலலை. இதையெலலாம் பார்க்க ஒரே ஏமாற்றமாக இருந்தது.

சென்னையிலிருந்து வந்திருந்த ஓர் பத்திரிகையாளர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளை வெளியிட்டும் கருத்துக்களைத் தெரிவித்தும் எழுதிவருகின்றன. மேடைப் பேச்சுக்களை விட மிக ஆபத்தானவை பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் எழுதப்படும் விஷமத்தனமான பிரசாரம். 1958-ம் ஆண்டுக்கு முன்னர் இன வெறியைத் தூண்டிவிடக்கூடிய மோசமான பிரசுரங்கள் மேடைகளில் மட்டுமல்லாது கட்சிப் பத்திரிகைகள் 'தேசிய' பத்திரிகைகள் மூலமாகவும் துண்டுப்பிரசுரங்கள் மூலமா கருணாநிதி. இது நல்ல முயற்சியும் முன்மாதிரியான செய்கையுமாகும். இங்கும் கட்சித்தலைவர்களைப் பிரதமர் அழைத்துப் பேசுவதுடன் தேசியபத்திரிகைகளின்ஆசிரியர்களையும் மாதம் ஒரு தடவையாவது பிரதமர் சந்தித்துப் பேசி, பத்திரிகைகள் தங்களுக்குள்ளேயே ஒரு நெறிமுறைக் கோட்பாடுகளை வகுத்துக்கொள்ள வழிசெய்வது விவேகமானதாக இருக்கும்.

## மேற்காசிய குமுறல்

மேற்காசியாவில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்கமுடியாத அளவுக்கு காலம் விரைவாகச் சென்றுகொண்டிருக்கிறதென்றும் சூயஸ் கால்வாய் நகரங்கள் மீது இஸ்ரேல் மீண்டும் குண்டு வீசினால் இஸ்ரேலியப் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுமென்றும் அடுத்தவாரம் நியூயோர்க்கில் கூடும் நான்கு வல்லரசுகள் இப் பிரச்னைக்கு அமைதியான தீர்வுகாண வழிதேடாவிட்டால் என்ன நடக்குமென்பதை எல்லோரும் தெரிந்துகொள்வரென்றும் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் எச்சரித்துள்ளார். போர் நிறுத்த எல்லை எச்சமயத்திலும் வெடித்துச் சிதறக்கூடிய ஆபத்தான கட்டத்திலிருப்பதாகவும், ஐக்கியஅரபுக் குடியரசு சுட்டிக்காட்டியிருக்கிறது, இதே சமயம் தங்கள் தலைவிதியை பிறர் நிர்ணயிப்பதற்கு விடமுடியாது' என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்திருக்கிறார். அதாவது மேற்காசியப் பிரச்னைக்கு நான்கு வல்லரசுகள் கூடிப்பேசித் தீர்வுகாண்பது முடியாதென்ற ரீதியில் அவர் பேசியிருக்கிறார்.

இஸ்ரேலின் எதிர்காலத்தையோ அரபுநாடுகளின் எதிர்காலத்தையோ வெளியார் தீர்மானிக்கமுடியாதென்பது உண்மைதான். ஆயினும் மேற்காசியப் பிரச்னைகளுக்கு மூலகாரணமும் அந்தப் பிரச்னைகள் வளர்ந்துவருவதற்கும் வல்லரசுகள்தான் என்பதையும் மறந்துவிடமுடியாது. அடுத்த வாரம் நியுயோர்க்கில்பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளின் தலைவர்களும் கூடிப்பேசுவது மேற்காசிய பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு கிடைக்க முடியாவிட்டாலும் நெருக்கடி தணிவதற்காவது உதவவேண்டும். வல்லரசுகள் கூடிப்பேசி நெருக்கடியைத் தணிய வைத்தால் இப்பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள இஸ்ரேலும் அரபுநாடுகளும் நேரடியாகச் சந்தித்துப் பேசி மேற்காசியப்பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு வழிபிறக்க வாய்ப்பு ஏற்படலாம்.

## வண்ண விநாயகர்

அழகான விநாயகரின் வண்ணப் படத்துடன் தமிழ்ப் புதுவருட பஞ்சாங்கம் 12-4-69 'ஈழநாடு' பத்திரிகையுடன் இலவசமாகக் கிடைக்கும். உங்கள் பிரதிகளுக்கு இன்றே உங்கள் பகுதி விற்பனையாளரிடம் ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### திருக்கோணசலம்

வடக்கே கைலாயத்தில் வீற்றிருந்த சிவபெருமான் தெற்கேவசிப்பவர்களை தாம் மறக்கவில்லையென்று காண்பித்து அவர்களையும் பக்தி மார்க்கத்தில் கொண்டுநடத்த விரும்பினார் என்று சூதமுனி கூறுகிறார். இதற்காக அவர் ஒரு போட்டியை ஏற்படுத்தினார். தேவர்கள்சபையில்அவர் சொன்னார். பிரமா விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரையும் நான் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யுமாறு நியமித்திருக்கிறேன். ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷனை இந்த பிரபஞ்சத்தை தாங்கும்படியும் பணித்துள்ளேன்! சபையில் அமைதி நிலவியது திடீரென்று வாயுபகவான் எழுந்து, ஆதிசேஷனா நானா பலசாலி? நான் ஆதிசேஷனுக்கு சவால் விடுகிறேன்' என்று கோபத்துடன் கூறினார். இருவருக்குமிடையில் வாக்குவாதம் உண்டாக சிவபெருமான் ஒரு போட்டியை ஏற்படுத்தினார் ஆதிசேஷன் கைலாயமலையை தனது நீண்ட உடலால் சுற்றி இறுகத் தழுவிக்கொள்ளவேண்டும். வாயுபகவான் அவருடைய பிடியை விடுவிக்க வேண்டும். இது தான் போட்டி வாயுபகவான்தமது வலிமையால் இந்த பிரபஞ்சம் முழுவதையும் ஆட்டிக்குலுக்கினார். ஆயினும் ஆதிசேஷனின் பிடி நழுவவில்லை. இந்த கோரமான போட்டியை நிறுத்தும்படி தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவர் உடனே இருவரையும் சமாதானப்படுத்தி இருவருமே சமபலம் உள்ளவர்கள் என்று தீர்ப்பளித்தார்.

பிறகு பிரமதேவனைப் பார்த்து 'உன்னுடைய சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்து கைலாயத்திலுள்ள இந்த திருக்கோண சிகரத்தின் மத்தியில் எனக்கு ஒரு கோயில் எழுப்புவாயாக' என்று பணித்தார். அங்கு எழுந்தருளியிருந்து கொண்டு, 'ஆதிசேஷா! நீயும் வாயுவும் சமபலம் உள்ளவர்கள். இனி உன் தலைகளில் ஒன்றை நிமிர்த்துவாயாக' என்று கூறிவிட்டு வாயுபகவானை நோக்கி தலைஅசைத்தார். உடனே பெரிய சூறுவளிக் காற்று எழுந்து கைலாய சிகரங்களில் மூன்றை பெயர்த்தெடுத்து தென் திசைக்கு கொண்டுபோயிற்று, வழியில் ஒரு சிகரம் திருச்சிராப்பள்ளியிலும், மற்றொன்று திருக்காளத்தியிலும், மூன்றாவது இலங்கையின் வடகிழக்கு பக்கத்திலும் விழுந்தன. முக்கோண

இத்தீவில் 'நினைவுக் கெட்டாத காலம் தொட்டு இந்துக்கள் வாழ்ந்தனர்' என்று சேர் வில்லியம் ஜோன்ஸ 1831-ம் ஆண்டு நவம்பர் 21ல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார்.

### குளக்கோடன்

சிலர் எழுதியிருப்பது போல குளக்கோட்டு மஹாராஜா மனுநீதிகண்ட சோழனின் புத்திரனுமல்ல முதன்முதல் சிவன் கோயிலை கட்டியவனும் அல்ல பிரமன் கட்டிய கோயிலை அவன் தாபரித்துவந்தான். மனுவுக்கு வரராம சோழன் என்று ஒரு புத்திரன் இருந்தான். அவனுடைய மகனுக்கு நெற்றியில் ஒரு கொம்பு போன்ற வளர்ச்சி இருந்தபடியால் அவன் குளக்கோட்டன் என்றழைக்கப்பட்டான். இவன் ஒருமுறை வரராம சோழனோடு திருக்கோணமலையில் தரிசனத்துக்கு வந்து வணங்கியபோது நெற்றியிலிருந்த கொம்பு திடீரென்று மறைந்துவிட்டது. குளக்கோட்டன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து கோயிலுக்கு ஏராளமான காணிகளை நன்கொடையாக எழுதி, விளக்கேற்றி தினமும் பூஜைகள் செய்வதற்கு அர்ச்சகர்களையும் நியமித்து, திருவிழாக்களுக்கும் ஒழுங்கு செய்தான் அவனைத் தொடர்ந்து கஜபாகு மஹாராஜா இத்திருப்பணிகளை கவனித்து வந்தான்.

### கல்வெட்டுகள்

திருக்கோணமலை ஆலயத்தின் சுவரிலும் அருகிலுள்ள கங்குவெளி என்னுமிடத்திலும் இரு கலவெட்டுகள் காணப்படுகின்றன, திருமலையின் இந்து புராதனத்தை இவை ஆதரிக்கின்றன. 'வெளி' 'குழி'. 'சோணநாதன்' என்பவை தென்னிந்திய தமிழ்ச் சொற்கள். முதல இரு சொற்களும் நில அளவையைரிம் மற்றது முக்கோணமலையின் தலைவனையும் குறிக்கின்றன. இக்கலவெட்டுகளிலுள்ள ஒரு வசனம் குறிப்பிடத்தக்கது. இந்த நன்கொடையை பிறுபவர்கள் கங்கைக்கரையில கரிய பசுக்களை கொன்ற பாபத்துக்கு உள்ளாவார்கள் கங்கையும் பசுவும் இந்துக்களுக்கு புனிதமானவை பசுவை கொலவது கொடிய பாபம் என்று அவர்கள் நம்புகிறார்கள். திருக்கோணமலையின் தொன்மை தமிழ் இந்துக்களுடன் தொடர்புள்ளது என்பதை இக்கலவெட்டு நிரூபிக்கிறது.

### இராவணன் வெட்டு

மலையில் காணப்படும் 'இராவணன் வெட்டும்'

ம் செய்தார் அவர் என்னை முள்ளுக்கம்பிவேலியால்இழுத்துக்கொண்டுபோனார். இவ் விஷயத்தை என்கணவருக்குச் சொன்னபோது அவருக்குத் திகைப்பாக இருந்தது.

பார்வதி பலாத்காரவழக்கில் எதிரியின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது 19 வயதான பார்வதி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு 67-ம் ஆண்டு மார்ச்மாதம் 27ந் திகதி வவனியாவில் ஒஸ்கா பெரேரா என்பவர்பார்வதியை பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் காந்த பெரேரா, புறக்டர் கே.ராமச்சந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எம். குகராசா நிமியக்கப்பட்டிருந்தார்.

எதிரியின் வழக்கறிஞர் பார்வதியை குறுக்கு விசாரணைசெய்தார்,

வழ: தோமஸ் என்பவர் பலாத்காரம் செய்ததுபற்றி முறைப்பாடு செய்யப் பொலிஸ் நிலையத்திற்குப் போனீர்? ஆம்.

வழ: தோமஸ் என்பவர் உமதுவீட்டில் இருப்பவர்?- இல்லை. அவர் வேறு இடத்தில் இருப்பவர்.

வழ; தோமஸ் உமதுவீட்டில் இருப்பவர் என்று நீர் இங்கு சொல்லவில்லை?- இல்லை,

வழ: உமது புருஷன்வேறு இடத்தில்இருப்பவர்?-வேலைக்கு வேறு இடம் போவார்.

வழ: ஒவ்வொரு இரவும் உமது கணவன் வீட்டிற்கு வருவாரா?- ஆம்.

வழ: தோமஸ் உம்மைப் பலாத்காரம் செய்ததினமும் உமது கணவன் வீட்டில் இருந்தாரா?- இல்லை காசுசேர்க்கப்போனவர் அன்றிரவு வரவில்லை.

வழ: நீரும் புருஷனும்ஒற்றுமையாகஇருக்கிறீர்களா?- ஆம்.

வழ: புருஷன் செலவிற்குப் பணம் தருகிறவரா?, ஆம்.

வழ: கீழ்கோர்ட்டில் சாட்சியமளித்தபோது புருஷன் 8 மாதமாக பிரிந்து வாழ்கிறார் என்றீரா?- சம்பவத்திற்குப்பின் பிரிந்து வாழ்கிறார்.

67-ம் ஆண்டு ஆவணியில் கீழ்க்கோர்ட்டில் சாட்சியமளித்தீர்?- ஆம்.

நீதி: கீழ்க்கோர்ட்டில் சம்பவம் நடந்தபோதும் புருஷன் கோபமாக இருந்தார்

றீர்?- ஆம்.

நீதி: கீழ்க்கோர்ட்டிலகலியாணம் முடித்து 4 மாதம் விட்டுப்பிரிந்திருந்தார் என்றீரா?-சம்பவம்நடந்தபின்புதான்.

வழ: கீழ்க்கோர்ட்டிலஅப்படிச் சொல்லவில்லையா?- இல்லை.

வழ: இதற்கு முன்புநான்கு ஐந்துபேர் உம்மைக் கடத்திச் சென்றதாக பொலிசுக்குப் புகார் செய்திருக்கிறீர்?- இல்லை.

வழ: படுக்கைக்குப் போகும்போது கதவைப் பூட்டிக்கொண்டு போவீர்?- ஆம்.

வழ: 26-ம் திகதி இரவும் கதவைப் பூட்டினீர்?- ஆம்.

வழ: கதவைத் திறந்து விட்டுப் படுத்திருக்கமாட்டீர்?- ஆம்.

வழ: கெட்ட நடத்தையுள்ள பெண்கள்தான் கதவைத் திறந்துவிட்டுப் படுப்பார்கள்?- நான் பூட்டிவிட்டுப் படுத்தேன்.

வழ: பொலிசாருக்கு ஏப்ரல் 1-ம் திகதி வாக்குமூலமளித்தீர்?- ஆம்.

வழ: இப்ப நீர் புருஷனுடன் இருக்கிறீர்?- ஆம்.

நீதியரசர்: கலியாணம் முடிக்குமுன்னர் நீர் வேறு ஆட்களுடன் சிநேகிதமாக இருந்தீரா?- இல்லை.

நீதி: கன்னியாகவே இருந்தீர்?- ஆம்.

வழ: கணவனுடன் உமது தாயாருக்கு தெரியாமல் கூடிக்கொண்டு ஓடினீர்?- இல்லை.

வழ: கலியாணம் முடிக்கும் காலத்தில் தாயாருடன் இருந்தீர்?- ஆம்.

வழ: கீழ்க்கோர்ட்டில் தாயாரின் விருப்பத்திற்கு எதிராக திருமணம்செய்ததாக கூறினீரா?- இல்லை.

நீதியரசர்: கலியாணம் முடிக்குமுன் கெக்கிராவைக்குச் சென்றீரா?- இல்லை.

நீதி: முடித்தபின் சென்றீரா?- ஆம், கணவனுடன் சென்றேன்.

வழ: 27-ம் திகதி எப்படி உமது கணவன் வந்தார்?- அம்மாவை அனுப்பி வரவழைத்தேன்.

வழ: எத்தனை மணிக்கு?- இரவு எட்டு மணிக்கு.

வழ: அம்மா, கணவனுடன் வந்தாரா?- முன்னர் வந்துவிட்டார்.

வழ: தோமஸ் பலாத்காரம் செய்ததாக புருஷனிடம் சொன்னீர்?- ஆம்.

வழ: புருஷனுக்கு திகைப்பாக இருந்தது?- ஆம்.

வழ: கீழ்கோர்ட்டில் இன்ஸ்பெக்டர் இறங்கி நிற்க கான்ஸ்டபிள் வாடி வீட்டிற்கு போனதாக கூறினீர்?- ஆம்.

வழ: இங்கு சாட்சியமளித்தபோது இருவரும் பொய்யா?- சில சம்பவங்களை மறந்துவிட்டேன்.

வழ: தோமஸ், மகாவித்தியாலய கட்டடத்தில் வைத்து பலாத்காரம் செய்தார்?- ஆம்.

வழ: முள்ளுக்கம்பி வேலியால் இழுத்துச் சென்றார்?- ஆம்.

நீதிய: எதிரி என்ன காரணத்திற்கு கூட்டிச்செல்கிறார் என்று உனக்கு விளங்கிவிட்டது?- ஆம்.

வழ: ஜீப்பின் அடியில் பாய் இருந்ததா?- இல்லை.

வழ: என்ன செய்தார்?- சத்தம்போட்டால் குத்திவிடுவேன் என்று பயமுறுத்தினார்.

நீதியரசர்: ஏன் அவரைக் கடிக்கவில்லை?- கடிக்க முடியவில்லை.

நீதி. ஏன் கடிக்க நினைக்கவில்லை.

நீதி: உன்னை பாதுகாக்க நினைக்கவில்லையா? முடியவிலலை.

நீதி: விரூண்டியிருக்கலாம் அலலது கடித்திருக்கலாம்? முழங்கையில காயம் மிருந்தது.

நீதி: எதிரி பலாத்காரம் செய்யப்போகிறார் என்று இருந்துவிட்டீர்? ஆம்.

வழ: பேசாமல இருந்தீர்? எதிர்த்துக் கொண்டிருந்தேன்.

வழ: ஜீப் நின்றது? ஆம் இன்ஸ்பெக்டர் வந்தார்ஆம்

வழ: பயத்துடன் இருந்தீர்? ஆம்.

வழ: இறங்கி நடக்கப்பார்க்கவிலலையா? முடியவிலலை.

நீதிய: எதிரி கையில கத்தி வைத்துக் கொண்டிருந்தார் ஆம்.

நீதிய: எங்கிருந்து கத்தியை எடுத்தார்? தெரியாது

நீதிய: கத்தி எவ்வளவு நீளம்? 7 அங்குலம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## சிதம்பரக்கல்லூரி, வல்வெட்டித்துறை

### 11-ந்தர விஞ்ஞான, கலை வகுப்புகளுக்கான பிரவேசவிண்ணப்பம்

சேர விரும்புவோர் 10-4-69-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்பத்திரங்களை கல்லூரி அலுவலகத்தில் பெறலாம். ஏப்ரில் 18, 19-ந் தேதிகளில் பிரவேசப்பரீட்சை நடைபெறும்.

அதிபர்

1248

---

இலங்கையின் சார்பாக நம வீரர்களுக்கு ஒரு மாலையும் போடவிலலை. ஒரு பட்டாஸ் வெடியும் கொளுத்தப்படவிலலை. இதை யெலலாம் பார்க்க ஒரே ஏமாற்றமாக இருந்தது.

சென்னையிலிருந்து வந்திருந்த ஓர் பத்திரிகையாளர் ஏன் இங்கு வந்தோம் என்று வாய்விட்டுச் சொலலி வருந்தினார்.

(தொடரும்)

0 0 0

ஆதிமாமலை அன்றெடுத்
தான் இற்றுச் சோதி யென்
றலுந்தெய்வருள் செய்திடும்
ஆதியான் மருகற்பெருமான்
திறம் ஓதி வாழ் பவர் உம்
பர்க்கும்உம்பரே.

அப்பர் அடிகள்

---

## கிளிநொச்சியில் கடும மழை

யாழ்ப்பாணம் சனி

கிளிநொச்சியில் கடந்த இரண்டு தினங்களாக கடும் மழை பெய்தது. தினமும் மத்தியானம் 12 மணிக்குப் பின் பெய்யத்தொடங்கிய இம் மழை ஆனையிறவு மட்டுமே பெய்தது.

---

### வயோதிபர் தற்கொலை

ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையான 60 வயது வயோதிபர் ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்த சம்பவம் காத்தான்குடியில் நடைபெற்றது.

---

## வல்வை த. அ. கிளை நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை சனி

வல்வெட்டித்துறை தமிழரசுக் கிளையின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் திரு வி. வி. இராமசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. க. துரைரத்தினம் எம். பி. தலைவர் வி. வி. இராமசாமிப்பிள்ளை உபதலைவர்கள் பண்டிதர் ச. வைத்திலிங்கம், க. அப்புத்துரை, க. இ. துரைசிங்கம் செயலாளர் சி. அருணாசலம் உபசெயலாளர் அ. சத்திவேல்பொருளாளர் ச. ஞானமூர்த்தி செயற்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். த. சுந்தரமணி, ந. தங்கவேலாயுதம், வ. பொன்னம்பலம், ஆ. சபாரத்தினம், கு. இராஜேந்திரம், ந. ஆனந்தராஜ், ப. பாலசிங்கம், கு. சண்முகநாதன், ந. நகுலசிகாமணி, மு. இராசையா, தே. இலட்சுமிகாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org